www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 10.10 திருவள்ளுவர் ஆண்டு 2054

14.07.2023 - 13.08.2023

ISSN : 2195-6480



## மாறி வரும் உலகுடன் நாமும் மாறுவோம்

FREE Magazine

## எது ஒரு மக்களை, தங்கள் அடையாளங்களைக் காக்கப் போராட வைக்கிறது?

## கரைந்து போகும் கிழக்கு

13 ஆம் ஆண்டில் அகரம்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


ADS BEST FOODS
Branded Masala
Canned Foods
Rice
Fresh Vegetables
Fresh Sea Foods
Green Vegetables
Haldiram's
Aachi
Elephant House
GRB
TRS
Tilda
Maliban
MTR
உங்கள் இல்லங்களுக்குத்
தேவையான அனைத்து
அத்தியாவசியப் பொருட்களும்
இப்போது ஒரே இடத்தில்
உங்கள் வீட்டில் இருந்தே
பாதுகாப்பான முறையில்
மளிகைப் பொருட்களை பெற
எமது Whatsapp
0176 45956273
இலக்கத்திற்கு
தொடர்பு ஏற்படுத்துங்கள்
Safe Fast Reliable
ADS BEST FOODS
ADS BEST FOODS
Rheinische str 79-81
44137 Dortmund
Tel : 0231 95046883
Whatsup : 017645956273

UP TO

# 15 GB
EXTRA

SPECIAL OFFER EXTENDED




ortel MOBILE

ortel MOBILE O2 e-plus+

OHNE PAUSE
NACH HAUSE.




20 GB

## + Phone calls to 70 destinations

Make calls abroad :
To all EU countries and 38 other international destinations

Surf & call in the EU

On-Net Flat : Make unlimited calls to the Telefónica Germany network

Individually upgradeable through the additional More Internet & More Minutes options

Now for 4weeks for "

**22,49€***




+5 GB

## 11 GB Internet Flat L

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 31.05.23)*

For tablets & surf sticks

Internet telephony (VoIP) equipped

Internet flat rate applies to all EU countries

Now for 4weeks for "

**19,99€***

## Ortel. Wir sprechen Deine Sprache.

ANDROID APP ON Google play

Available on the App Store

Aufladbar mit:





AKARAM
அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 ஆடி 2023 - 13 ஆவணி 2023

சுவடி / ISSUE 10.10

**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu

ISSN 2195-6480

**www.akaram.eu**

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பர தார வள்ளல் பெருமக்களுக்கும் வணக்கம். எல்லாரும் எல்லாமும் நலமாக பெற்று, நலமுடனும், வளமுடனும் வாழ வாழ்த்துகிறது.**

# மீண்டும் எழுவோம், மீண்டும் வருவோம்!

இராவணனின் அரச சபையில் சீதையைத் தேடிப் போன அனுமான், தன் குரங்குப் புத்தியால் செய்த சேட்டைகள் காரணமாக இலங்கேசுவரன் முன் கைதியாக நிறுத்தப்படுகிறான். சபையில் ஆசனம் கொடுக்கப்படாத நிலையில், அனுமன் தனது வாலைப் பீடம் போலச் சுருட்டி, அதன் மேல் அமர்ந்தான் என்றது இராமாயணக் கதை. கதையைப் போன்றே மக்களால் தேர்ந்து எடுக்கப் படாத, இன்றைய இலங்கேசுவரனான ஜனாதிபதி ரணில் இனப் பிரச்சனைக்குத் தீர்வு என்கிற இல்லாத வாலை, இருப்பது போல மாதக் கணக்காக அனுமான் வாலைப் போல வானளாவச் சுருட்டி, அதன் மேல் இருப்பது போன்று வித்தைக் காட்டுகிறார்.

அதைக் கண்டு எங்கள் குரங்குகள், இந்த அனுமான் தமிழருக்குத் தீர்வைத் தருகிறார் எனக் கக்கூசு குசுனி என ரணிலுடன் ஓடி, ஓடிப் பேசுவதாகக் கதை அளந்து திரிகிறார்கள். நாயின் வாலை நிமிர்த்தினாலும், இவர்களை யாரும் என்றைக்கும் நிமிர்த்தவோ, திருத்தவோ முடியாது. இவர்களுக்குச் சாப்பிடவும், அரட்டை அடிக்கவும் இலட்சக் கணக்கில் சம்பளமும், கிம்பளங்களும் வங்கியில தானாக வந்து விடுவதை அனுபவிக்கப் பாராளுமன்றம் தேவை.

3 மாதத்துக்கு 1 நாள் போனாலும், முழுசாக வங்கியில் அவர்களின் கணக்கில் கிடைத்து விடும். போதாக் குறைக்கு இந்தியா, அமெரிக்கா போன்ற வெளி நாடுகளின் பணக் கொடைகளும், வெளிநாட்டு கட்சிக் கொத்தடிமைகளின் நிதி வழங்கலும், ஒவ்வொரு தேர்தலின் போதும் கிடைத்து விடுகிறது. இவர்களின் சொத்துகளும், பணங்களும்

வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி விடுகிறார்கள். ராஜபக்சேக்கள் ரணில்கள் மட்டும்தான் நாட்டின் செல்வங்களை எல்லாம் கொள்ளை அடித்து, நாட்டைக் குட்டிச் சுவராக்கினார்கள் எனச் சொல்ல முடியாது.

72 வருடங்களாக இவர்களுக்கு வாக்களித்து, வாழ்வளித்த தமிழ் மக்களுக்கு நிரந்தர அடிமை வாழ்க்கையும், இனப் படுகொலையும், நிலப் பறிப்பு, சிங்களக் குடியேற்றம், பௌத்தப் பிக்குகள், இராணுத்தினரால் தமிழ் இளைஞர்களும், போதைப் பொருள், பாலியல் வன்முறைகள் பற்றி வெளியே சொல்ல முடியாத வேதனைகளை மட்டுமே இவர்களின் சாதனை அரசியல் உள்ளது.

1972 ஸ்ரீமாவோ புதியக் குடியரசு அமைப்பின் மூலம், தமிழ் இனத்தைச் சிங்கள பௌத்த ஒற்றை ஆட்சியை, சட்டப்படி எதிர்கொள்ளாமல், கோமாளிகளாக வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் மூலம் மடை மாற்றி, தமிழ் இளைஞர்களைப் போராட வைத்து, எதிரிகளுடன் இணைந்து தமிழ் இன அழிப்பை இந்தியாவில் இருந்து வேடிக்கை பார்த்து விட்டுத் திரும்ப வந்து, ஒற்றை ஆட்சியில் 13ஆவது திருத்தம் என்ற ஊசிப் போன வடைக்காக, இன்று கிராம சபைகளைக் கூட வெற்றி பெற முடியாத நிலையில், தேர்தலுக்குப் போட்டிப் போடும் இவர்களை மக்கள் என்ன சொல்லித் திட்டினாலும், அடை மழையில் நனையும் எருமை மாடுகளாக உள்ளனர்.

சிங்கள இந்தியத் தலைமைகளுடன் கொஞ்சிக் குலாவும் இவர்களால், பெருமையுடன் வாழ்ந்த தமிழ் இனம், இன்று ஏதிலிகளாக மாற சிங்களத் தலைவர்களை விட இவர்கள்தான் காரணம். சொந்த நிலத்தைப் பறிகொடுக்கவும், தமிழ் இன அழிப்பைச் செய்த இந்திய, இலங்கை, அமெரிக்க அரசுகளின் நம்பிக்கை மோசத்தை மறந்து, இவர்கள் தமிழ் மக்களின் அரசியலைப் பேசாமல், சிங்கள அரசின் கடன்களுக்கும், உலக வங்கி நாணய நிதியத்திடம் கடன் வாங்குவது பற்றியும், சீனாவின் வரவால் இந்தியாவின் பாதுகாப்புக் கவலை பற்றியும், புலம்பெயர் தமிழர்களின் சொத்துகளையும், கொலைகார இலங்கை அரசிடம் தானமாக வழங்கப் புத்திமதி சொல்லும் பித்தர்களாகப் பேசும் இவர்களின் புத்தியை எப்படி அனுமதிப்பது?

தமிழ் இனம் வளமுடன், பாதுகாப்பாக வாழவேண்டும் என்றால், சுதந்திரமான தனித் தமிழ் நாடு தவிர்க்க முடியாத தீர்வாக உள்ளது. தனித் தமிழ்நாட்டை உருவாக்க இதுதான் சிறப்பான காலம். சர்வதேச சமூகத்தின் ஆதரவை, ஜெனிவா மனித உரிமை இணையத்தின் கரங்களை வலுப்படுத்தி, உலகத் தமிழ் இனம், சுதந்திர தனித் தமிழ் தாய் மண் மீட்பை விரைந்து செயற்படுத்துவோமாக!

**மீண்டும் வரும்வரை,**

**ஆசிரியர், அகரம் குழுமம்**





த. எதிர்மன்னசிங்கம்

# 23ஆம் புலிகேசிகளும், ஈழத் தமிழர் பிரச்சினைகளும்

**சொ**ந்த புத்தி இல்லாத, சொல் புத்தியும் கேளாத ஈழத் தமிழர் தலைவர்களின் மந்த புத்தியால், எமது பூர்வீகத் தாயகமான யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், நீர்கொழும்பு, சிலாபம், களனி ஆற்றின் எல்லைவரை, கடற்பகுதியுடன் குருநாகல், அநுராதபுரம், பொலன்னறுவை, திரிகோணமலை, அம்பாறை, கண்டி, மாத்தளை, மட்டக்களப்பு, பொத்துவில் வரை பரந்திருந்த தமிழர் தேசத்தை ஆங்கிலேய அரசு, *1803* இல் சிங்கள தேசத்துடன் இணைத்தது. இவர்கள் அனைவரும் 23ஆம் புலிகேசி படத்தில் வரும் கதாபாத்திரத்தை மிஞ்சி விடும் அளவுக்குப் புத்திசாலிகள். கரடி காறித் துப்பாத ஒன்றுதான் ஒரே குறை!.

அந்த இணைப்பை, அன்றிருந்த ஆங்கிலேய அரசைத் தட்டிக் கேட்கும் தமிழ் அரசர்களோ, தலைவர்களோ இல்லாத காரணத்தால், தமிழர் தாயகம் சிங்கள தேசத்துடன் இணைக்கப்பட்டது. இந்த நிலை தமிழரின் யாழ்பாண அரசின் சங்கிலி அரசனும், வன்னி அரசின் பண்டார வன்னியனின் அரசும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் இருந்ததை, ஆங்கிலேயரால் கடைசி தமிழ் அரசன் பண்டார வன்னியன் வீழ்த்தப்பட்டு, கண்டி அரசையும், ஆங்கிலேயர் கைப்பற்றி, அரசனுடன் ஒப்பந்தம் செய்து, முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த பின்னர், *1933* இல் தமது வசதிக்காகத் தமிழரின் ஆட்சிப் பிரதேசங்களான யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், நீர்கொழும்பு, சிலாபம், அநுராதபுரம் மற்றும் கண்டி அரசின் நிலங்களான கண்டி, மாத்தளை, பொலன்நறுவை, திரிகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, பொத்துவில், புனானை அடங்கலாக கதிர்காமம், திசைமாறகமம், கும்புக்கன் ஆற்றின் கழிமுகம் வரை பரவி இருந்த தமிழர் நிலங்களைச் சிங்களவரின் நிலப் பகுதிகளுடன் இணைத்து தமிழ் மக்களையும், தமிழர் நிலங்களையும் அதே ஆங்கிலேயரின் அரசு.

இந்தப் பிரதேசங்கள் எல்லாம் முன்னர் யாழ்ப்பாண மற்றும் கண்டி அரசர்கள் ஆண்டு வந்த தமிழரின் தாய் மண். யாழ்ப்பாண அரசை போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் கைப்பற்றித் தமது ஆளுகைக்குள் போரிட்டுப் பெற்ற தமிழர் நிலங்கள்,

ஒற்றை ஆட்சி அமைப்பாக மாற்றி, சிங்களவரின் தயவில் மிகப் பெரிய அளவிலான தமிழ் மக்களையும், தமிழர் நிலங்களையும் அடிமைகளாகச் சுதந்திரத்தை 1957 வழங்கும் பொழுது, கபடத்தனமான சோல்பரி பிரபுவின் அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தமிழினம் சிங்களத்தின் அடிமையாகும் நிலை உருவானது.

1830இல் அமுலான டொனமூர் அரசமைப்புச் திட்டத்தால், ஆங்கிலேயரின் ஆட்சி முறை, சிங்களத் தலைவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் விதமாகவே அமைந்தது. தமிழர்கள் ஆறுமுக நாவலரால் முன்னெடுக்கப்பட்ட 'தமிழர் எழுச்சி' காரணமாகவும், இந்தியாவின் நேருவின் ஆதரவு பெற்ற சிங்களத் தலைவர்கள், ஆங்கிலேய ஆட்சியாளர், தமிழ் இனப் பற்றில்லாத பொன்.இராமநாதன் போன்றவர்களின் ஆதரவுடன் விளங்கிய டி.எஸ் தலைமையிலான சிங்களத் தலைவர்களின் விருப்பப் படி இலங்கையின் சுதந்திரத்தைச் சிங்களவரிடம் ஒப்படைத்தனர்.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் இங்கிலாந்து சென்று, 50க்கு 50 சமத்துவத்தைப் பெற முயன்ற நிலையில், மலையகத் தமிழ் பிரதிநிதிகளுடன் சிற்றம்பலம் போன்ற கொழும்புத் தமிழரின் ஆதரவுடன், அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றி, பொன்னம்பலத்தின் கோரிக்கையை முறியடித்து விட்டார். ஏமாற்றம் தாங்காமல் பின்னர் டி.எஸ்ஸிடம் சரணாகி, அவரின் மந்திரி சபையில் மந்திரியாகி விட்டார்.


தந்தை செல்வா


ஜீ.ஜீ. பொன்னம்பலம்




**தமிழர் தாயக மண் எது? என அறியாத பேர்களுக்காக இந்த வரைபடங்கள்**




ஜீஜீ. தலைமையில் தெரிவான செல்வ நாயகமும், கோப்பாய் வன்னிய சிங்கமும் பிரிந்து, தமிழ் அரசுக் கட்சியைத் தொடங்கினர். இப்படியாகத் தமிழ் இனத் தலைவர்கள் ஒட்டும் உறவும் கெட்டுச் சிங்கள, அமெரிக்க, இந்தியக் கைக் கூலிகளாகத் தமிழ் இனத்தைப் பாழடித்து விட்டனர். அவர்களின் அரசியல் வாரிசுகள் இன்றுவரை தமிழினத்தை அழிக்கும் அரசியலைச் செய்து வருகிறார்கள்.

தந்தை செல்வா சாகும் வரை நடைப் பிணமாகி, வைத்திய சாலையில் நினைவிழந்து சாகும் போதும் பாராளுமன்றக் கதிரையைப் பிடித்த படியே மூச்சை விட்டார். அந்தப் பாரம்பரியத்தைக் கைவிடாமல், அவரது வழியில் இன்று சம்பந்தன் இருக்கிறார். இன்று புலிகளோ, ஒரு காலத்தில் மின்கம்ப தண்டனைகளை வழங்கிய எலிகளோ இல்லை என்பதால், எங்கள் தவைர்களுக்குப் பாராளுமன்றம் முதியோர் இல்லங்களாகி விட்டன.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் இல்லை, அமைதியான வாழ்வும் இல்லாமல் அநாதரவான வாழ்க்கை, பாதுகாப்பான சூழல் இல்லாமல் தவிப்பது, எங்கள் அரசியல்வாதிகளுக்குத் தெரியாத படி சுயநலம், சுகவாழ்வு, மோகம் கண்களைக் குருடாக்கி விட்டது.

உண்மை நிலையைக் கொழும்பில் வெளியாகும் ஆங்கில இணையத் தளத்தில் வெளியான வாசகர் கருத்துகளில் இப்படியும் சில வந்த படி உள்ளன என்பதை, அகரம் வாசகருக்கு தருவதன் மூலம் சம்பந்தன், சுமந்திரன் போன்ற புத்திசாலிகளை எவ்வளவு போற்றினாலும், போதாது என்பதே தமிழ் இனம் செய்த பாவம்.

“70 ஆண்டுகள் அடக்குமுறை ஆட்சியின் பின்னரான இப்பொழுது, அடக்குமுறை, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இன அழிப்பு, அதன் பின்னர் இராணுவ அடக்கு முறை ஆட்சி, குடியேற்றங்கள் வழியாகக் குடிப் பரம்பலை மாற்றுதல், சிங்கள மயப்படுத்தப் புத்த மதத்தைப் பரப்புதல். இவற்றுக்கு எல்லாம் தமிழர்களுக்கு ஒரே ஒரு தீர்வு ‘சுதந்திரத் தனித் தமிழ்நாடு மட்டுமே!’ தோற்றுப் போய் விட்ட இந்தப் பேரினவாத அராஜக ஆட்சியில் இருந்து விடுபடுவதே.

தமிழ் ஈழம் மட்டும்தான் எமக்குப் பாதுகாப்பும், அமைதியும், தன்மானம், எமது நிலத்தைப் பாதுகாக்க, எமது கலாச்சாரம், எமது பாரம்பரியம், எமது மொழி, எமது மதங்கள், எமது சூழல், எமது தாயகத்தில் நாம் மனிதர்களாக வளமுடன் வாழவும், பிராந்தியத்தின் பாதுகாப்பு பெறவும் உதவும். தமிழரின் தாகம் தமிழ் ஈழம்.

இந்த நினைப்பும், உணர்வும், அறிவும் எங்கள் தலைவர்களுக்கு எப்போது வரும்?



V
BOX
GMA
Pinoy TV
விஜய்
ZEE
தமிழ்
Athavan
Music HD
RŪPAVĀHINĪ
RADIO
SETTINGS
hotstar
YouTube
EROS NOW
ஆதவன் HD
TV
கலைஞர்
ETHERNET Connected
SPECIAL OFFER
SWISS DISTRIBUTOR
importas
International Foods & Beverages
ZURICH 043 343 03 55
BERN 031 951 24 44
www.importas.ch
GERMANY : +49 1778009888
ITALY : 00393510257812
SWISS : 0041779633259

**பூமிபுத்திரன்**



# எங்கே செல்லும் இந்தப் பாதை...?

உக்ரைன் போர் தொடர்பில், ரஸ்யாவை எப்படியாவது தோற்கடித்துவிட வேண்டும் என நினைக்கும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம், உக்ரைனுக்கான ஆயுதத் தளபாட உதவிகளை அள்ளி வழங்கிக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்த விடயம். பலத்த ஆரவாரத்துடனும், மேற்குலகின் ஆசீர்வாதத்துடனும் மே மாதம் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட உக்ரைனின் ‘எதிர்த் தாக்குதல்’ எந்தவித வெற்றியையும் தராமல் போனது, உக்ரைனை விடவும் பின்னணியில் செயற்பட்ட மேற்குலகத்தையே அதிகம் பாதித்துள்ளமை புரிகிறது. அதனால் ஏமாற்றத்துக்கும், மனக் குழப்பத்துக்கும் ஆளான அமெரிக்கா, தடைசெய்யப்பட்ட கொத்தணிக் குண்டுகளை உக்ரைனுக்கு வழங்கத் தயாராகி வருகின்றது.

ஒரே குண்டிலிருந்து பல கிளைகளாகப் பிரிந்து தாக்கும் திறன் கொண்டது இந்தக் கொத்தணிக் குண்டு. அது மாத்திரமன்றி இவ்வாறு வெடித்துச் சிதறும் சிறு குண்டுகள், நீண்ட காலத்துக்கு அந்தச் சூழலில் நிலைகொண்டு, மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூயடிவை. ஒட்டுமொத்த மனித குலத்துக்கே விரோதமானவை என்ற அடிப்படையில், உலகின் 120க்கும் மேற்பட்ட நாடுகளில் இந்தக் குண்டு தடை செய்யப்பட்டுள்ளது. மனித உரிமை அமைப்புகள் கூட இந்தக் குண்டின் பாவனைக்கு எதிராக தொடர்ச்சியாக ஓங்கிக் குரல் தந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், இத்தகைய குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க, அமெரிக்கா முடிவு செய்துள்ளது. அதற்கு அமெரிக்கத் தரப்பில் சொல்லப்படும் காரணமோ விசித்திரமாக உள்ளது. “உக்ரைன் போரில் ரஸ்யா வெற்றிபெற்று, உலகிற்கு ஏற்படுத்தவுள்ள



பாதிப்பை விடவும் கொத்தணிக் குண்டுகள் அதிக பாதிப்பை ஏற்படுத்தி விட மாட்டாது" என்ற கருத்து அமெரிக்காவிடம் இருந்து வெளிவந்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. 'எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுனப் பிழை ஆகிவிட வேண்டும்' என அமெரிக்கத் தரப்பு நினைத்துச் செயற்படுவது ஒன்றும் இதுவே முதன்முறையும் இல்லை. வரலாறு நெடுகிலும் இத்தகைய போக்கிற்கான ஆதாரங்களை அடுக்கிக் கொண்டே போகமுடியும்.

தனது மேலாண்மையைத் தக்கவைக்க, உலகம் முழுவதிலும் போர் புரியும் அமெரிக்க மேலாதிக்கம், உலகின் பல பாகங்களிலும் ஏற்படுத்திய அழிவுகள் எண்ணிக் கணக்கில் இல்லாதவை. அத்தகைய போக்கு மானுடக் குலத்துக்கு விரோதமானவை எனப் பல சந்தர்ப்பங்களிலும் நிரூபிக்கப்பட்ட போதிலும், மானுட நேயத்தை விரும்புவோரால் தொடர்ச்சியாகக் கண்டிக்கப்படுகின்ற போதிலும், தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க அமெரிக்கா தயாராக இல்லை. இத்தகைய தான்தோன்றித்தனமான போக்குக்குப்




பின்னால் அணி திரளும் நண்பர்கள் இருப்பதால், அமெரிக்காவால் தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட முடிகின்றது.

ஆனால், குறித்த கொத்தணிக் குண்டுகள் விவகாரத்தில், அமெரிக்க அணியிலிருந்தே எதிர்ப்புக் கிளம்பி உள்ளமை மனதுக்கு மகிழ்வைத் தருகின்றது.

குறித்த விடயத்திலான முதல் எதிர்ப்பை ஸ்பெயின் பதிவு செய்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஸ்பெயின் நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் மார்கிரிட்டா றொப்லஸ், "உக்ரைன் தொடர்பில் ஸ்பெயின் திடமான கொள்கையுடன் உள்ளது. இருந்தும் எந்தக் காரணத்தைக் கொண்டும் கொத்தணிக் குண்டுகள் அந்த நாட்டுக்கு வழங்கப்படக் கூடாது" எனக் கூறியுள்ளார். "தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உக்ரைன் நாட்டின் சட்டபூர்வ உரிமையை நாம் மதிக்கிறோம். ஆனால், அது கொத்தணிக் குண்டுகள் மூலம் எட்டப்படக் கூடாது" என அவர், ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

அதேபோன்று யேர்மனியும், கொத்தணிக் குண்டுகளை உக்ரைனுக்கு வழங்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் அன்னலேனா பெயார்பொக், "யேர்மன் எப்போதும் கொத்தணிக் குண்டுகளுக்கு எதிரான ஒஸ்லோ ஒப்பந்தத்தை மதித்து நடக்கும்" எனக் கூறியுள்ளார். ஒஸ்ரியாவும் அமெரிக்காவின் இந்த அறிவிப்பை எதிர்த்துள்ளது. 'ஆயுதமோதல் நடைபெறும் பிரதேசத்துக்குக் கொத்தணிக் குண்டுகளை அனுப்புவது தவறான சமிக்ஞை' என்கிறது ஒஸ்ரிய அறிக்கை.

கொத்தணிக் குண்டுகளை அனுப்பி வைப்பது தொடர்பான முடிவுக்கு, அமெரிக்கா கூறியுள்ள மற்றொரு காரணமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. தற்போது பதில் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் உக்ரைன் படையினருக்குத் தேவையான 155 மி.மீ. எறிகணைக் குண்டுகள் போதிய அளவில் இருப்பில் இல்லாததால்,

அதே பரிமாணத்தைக் கொண்ட கொத்தணிக் குண்டுகள் வழங்கப்பட உள்ளதாக அமெரிக்கா தனது செயலை நியாயப்படுத்தி(?) உள்ளது. இதன் நீட்சி என்னவாகும்? என்பதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாமல் உள்ளது.

ஏற்கனவே, ரஸ்யத் தரப்பில் போருக்கு ஆதரவானவர்கள் அணுகுண்டுகளை வீசி, உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளமை தெரிந்ததே!. ரஸ்யா கூட தனது அணுகுண்டுகள் சிலவற்றை பெலாரஸ் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது. எனினும் உக்ரைன் போரில் அணுகுண்டுகளைப் பாவிக்கப் போவதில்லை என ரஸ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உறுதிமொழி வழங்கியுள்ளார். எவ்வாறாயினும், இந்த உறுதிமொழியின் உண்மைத் தன்மை போரின் போக்கிலேயே தங்கியுள்ளது என்பதே யதார்த்தம். எப்பாடுபட்டாவது போரில் உக்ரைன் வெற்றி பெற்றுவிட வேண்டும் என அமெரிக்கத் தரப்பு கங்கணம் கட்டி நிற்கும் நிலையில், ரஸ்ய நிலைப்பாட்டில் மாற்றம் வராது என எதிர்பார்க்க முடியாது.

மறுபுறம், உக்ரைனுக்கு அணுவாயுதங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும், குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. அண்மையத் தகவல்களின் படி, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் அணுவாயுதங்களை உக்ரைனுக்கு வழங்கும் எத்தேசத்தில் உள்ளதாகப் பகீர் தகவல் ஒன்று வெளியாகி உள்ளது. அது நடைபெறுமானால் மூன்றாம் உலகப் போரும், மானுடத்தின் அழிவும் தவிர்க்க முடியாததாக மாறிவிடும்.

இதேவேளை, உக்ரைனுக்குக் கொத்தணிக் குண்டுகளை வழங்குவதால், போரின் கள நிலவரத்தை உக்ரைனுக்குச் சாதகமாக மாற்றிவிட முடியாது என ரஸ்யா தெரிவித்துள்ளது. அத்தோடு இவ்வாறு தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வழங்குவது என, அமெரிக்கத் தரப்பில் எடுக்கப்பட்ட முடிவு, போரில் உக்ரைனின் தோல்வியை ஏற்றுக்கொள்வதாக ஆகிவிடும் என ரஸ்யத் தரப்பில் கூறப்படுகின்றது.

ரஸ்ய வெளியுறவுத்துறைப் பேச்சாளர் மரியா சக்ரோவா, “உக்ரைனுக்குக் கொத்தணிக் குண்டுகளை அனுப்பி வைக்கும் அமெரிக்காவின் முடிவானது, போர்க்களத்திலே உக்ரைனும், அதன் மேற்குலக ஆதரவாளர்களும் பலமிழந்து போயுள்ளனர் என்பதன் வெளிப்பாடே! இதனால் ரஸ்யாவின் போர் நடவடிக்கைகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது. ஆனால், இதன் மூலம் உக்ரைன் பிரதேசத்தைக் கண்ணிவெடிப் பூமியாக மாற்றும் கைங்கரியத்தில் அமெரிக்கா மறைமுகமாகப் பங்கேற்கிறது. எதிர்காலத்தில் நிகழப்போகும் உக்ரைன் மற்றும் ரஸ்யப் பிள்ளைகளின் மரணத்தில் அமெரிக்காவுக்கும் பங்கு உள்ளது” எனத் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போர் தினமும் ஒவ்வொரு பரிமாணத்தை நோக்கி விரிவடைந்து கொண்டே செல்வதைப் பார்க்க முடிகின்றது. இந்நிலையில், போரின் எதிர்காலம் மனித குலத்திற்கே அச்சுறுத்தலாக மாறி விடுமோ என்ற அச்சம் உருவாவதைத் தவிர்க்க முடியவில்லை.

கொத்தணிக் குண்டுகளின் பாவனையைத் தடை செய்யும் ஐ.நா. சாசனம் 2008ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. இன்றுவரை 110க்கும் மேற்பட்ட நாடுகள் இந்தச் சாசனத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும், அமெரிக்கா, ரஸ்யா, உக்ரைன் ஆகிய நாடுகள் இந்தச் சாசனத்துக்கு இதுவரை ஆதரவு தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# TR Bati

**Professionnel, Fiable, Pile l´heure**

**நிபுணத்துவம், நம்பகத்தன்மை, குறித்த நேரத்தில்**
**அனைத்து வீட்டுவேலைகளும் செய்து கொடுக்கப்படும்.**



**+33 6 52 46 48 59**
**+33 6 52 60 29 06**

**1 Allée Pierre de Ronsard**
**77200 Torcy**
**France**
contact@
www.trbati.fr
trbatikandiah@gmail.com

| | |
|---|---|
| Rénovation | சீரமைப்பு |
| Plomberie | தண்ணீர் குழாய் இணைப்பு |
| Électricité | மின்சார வேலை |
| Charpenterie | தச்சு வேலை |
| Carrelage | மார்பிள் பதித்தல் |
| Parquet | பலகை பதித்தல் |



**இலட்சுமணன்**

# பதவி முடிவில் பிறக்கும் ஞானம்

கொல்வின் ஆர்.டி.சில்வா

*1955*இல் இரு ஆட்சி மொழிகள், ஒரு நாடு, ஒரே ஆட்சி மொழி, இரு நாடுகள் எனக் கடுமையாகவே எச்சரித்த அதே கொல்வின் ஆர்.டி.சில்வாதான், பின்னர் ஒரு மொழி சட்டத்திற்கு அரசியலமைப்புச் சட்ட அந்தஸ்தை அளித்தார்.

"பல இன, மொழி, மத மக்கள் வாழும் நாடாக உள்ள இந்தியாவில், 'இந்தியர்கள்' என்ற ரீதியில் அனைவரும் ஒன்றுபடுவதைப் போல இலங்கையிலும் 'இலங்கையர்' என்ற ரீதியில் அனைவரும் ஒன்றுபட வேண்டும்" என்று முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார். அவருடைய கருத்து சிறந்ததொரு கருத்தாக இருந்தாலும், காலங்காலமாக சிங்களவர்களது மனோநிலை இருந்து வருகின்ற நிலை காரணமாகவே, இது நடைபெறாமலேயே இருக்கிறது என்பதனை, அவர் மறந்து விட்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். மூவின மக்கள் கொண்ட இலங்கையில், ஒற்றுமையின்மை காணப்படுவது குறித்து, சீனா உட்பட வேறு பல நாடுகளும் கேலிதான் செய்கின்றன.

அதே போன்று 30 வருட யுத்தம் வடக்கையும், தெற்கையும் பிரித்த நிலையில், யுத்தம் நிறைவடைந்துப் பத்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், எமக்குள் ஒற்றுமைப்படுதல் இல்லாமல் காணப்படுகிறது. அதற்குக் கடந்த கால கசப்பான அனுபவங்கள், ஆட்சியாளர்களின் கடும் போக்கு, சிந்தனைகள் ஒன்றுபடும் தன்மையிலிருந்து நம்மை விலக்கி வைத்துள்ளன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், தமது சொந்த வாழ்விடங்களுக்குச் செல்ல முடியாமல், அகதி முகாம்களில் தங்கியிருந்தபோது, எனது ஆட்சிக் காலத்தில் சுமார் 2,500 ஏக்கர் காணிகளை விடுவித்தேன். அதுமட்டுமல்லாமல், தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான ஒரு புதிய அரசியல் அமைப்பின் தேவையைக் கருதி, புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை ஆரம்பித்தேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், அந்தப் பணிகளை நிறைவுசெய்ய முடியவில்லை" என்றும் அவர் மனம் நொந்திருக்கிறார்.

இதே போன்றுதான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா

குமாரதுங்க இந்த நாட்டின் இன்றையக் கையறு நிலைமைக்குப் புரையோடிப்போன இனப்பிரச்சினை தீர்க்கப்படாமையும், நாட்டில் எங்கும் பரந்து வியாபித்து நிற்கும் ஊழலுமே இதன் அடிப்படைக் காரணம் என்று கூறினார். இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா அம்மையாருக்குக் காலம் கடந்து ஞானம் பிறந்தது, சில மாதங்களுக்கு முன்புதான்.

இவ்வாறான காலம் கடந்த ஞானங்கள் உண்மை என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், பயனேதுமில்லை என்பதே எதார்த்தம். இலங்கை சிங்களருக்கே என்ற அணுகுமுறையினை அவர்கள் விட்டுவிடுவதற்கோ, சற்றுப் பகிர்வதற்கோ தயாரில்லா நிலைப்பாட்டிலேயே இலங்கையின் ஆட்சித் தலைமை நகர்ந்து கொண்டிருக்கிறது. இனவாதம் பேசினால், பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் படக்கூடும் என்ற நிலைமையே இன்னமும்



தொடர்ந்த வண்ணமிருப்பது இலங்கையின் துரதிஸ்ரமே! இதுவே இதன் அடிநாதமும் கூட.

இந்த நாட்டின் நன்மைக்காக நான் பாடுபடவேண்டும் என்று, இதற்கு முன் பதவிகளிலிருந்தத் தலைமைகள் சிந்தித்திருந்தால், இலங்கையில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எப்போதோ கிடைத்திருக்கும். அதனை விடவும், பல தசாப்தங்களாக இலங்கையர்கள் இழந்த செல்வம், உயிர்கள், அமைதி, சமாதானம் என்பவற்றைப் பற்றி எல்லோரும் கவலை கொள்ளும் கொடுமையும் ஏற்பட்டிருக்காது. கடந்த காலங்களில் நடைபெற்ற ஏமாற்ற வேலைகளும், அதனால் விளைந்த கொடுமைகளும்தான் நேர்மையான, பக்கசார்பு சிந்தனையற்ற, முன்னேற்றக் கருத்துகளுடைய சிங்களரைக்கூடத் தமிழர் தரப்பு நம்பவோ, அங்கீகரிக்கவோ தயாரில்லாதத் தன்மையை ஏற்படுத்தியது. இதுவே உண்மையும் கூட.

ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன், காராளசிங்கம் என ஆரம்பகால தமிழ்த் தலைவர்களது கோரிக்கைகள் பயனற்றுப் போனபோது, அதன் கொடுமைகளையும், விளைவுகளையும் தமிழர்கள் அனுபவித்தனர். இப்போதும் இருக்கின்ற தலைவர்கள் எடுக்கின்ற முயற்சிகள் ஏதுமில்லாதவைகளாகவே இருந்து கொண்டிருக்கின்றன.

இன ரீதியாக அல்லாமல், அரசியல் ரீதியாகத் தமிழர்களை அணி திரட்டிக் கொண்டிருந்தமையினால் உருவான இனப்போர், சிங்களவர்களை எதிரிகளாகவே பார்க்கின்ற மனோநிலையைத் தமிழர்களிடம் ஏற்படுத்தி விட்டது. சிங்கள எதிர்ப்பென்பது காலப்போக்கில் தமிழர்களைத் தோற்றவர்களாக ஆக்கி விட்டிருக்கிறது என்றும் சொல்லலாம். இந்தத் தோல்வியை ஏற்கும் மனோதிடம்கூட இல்லாதவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஏகோபித்த மக்கள் ஆதரவு, 69லட்சம் மக்களின் வாக்குகள் வழங்கப்பட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, நாட்டை விட்டுத் தப்பித்து ஓடவேண்டியேற்றப்பட, மிகச் சாதாரணமான வாக்குகளைப் பெற்று, தேசியப் பட்டியலின் ஊடாகப் பாராளுமன்றம் வந்த ரணில் விக்கிரமசிங்க, தற்போது ஜனாதிபதியாக ஆகும் நிலை உருவானது கூட நம்முடைய நாட்டின் அரசியலின் இயலாமைதான்.

1970இல் இலங்கை சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி, மிகப் பெரும் வெற்றி பெற்று, ஆட்சி அமைத்தது. அப்போது அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம்

மேற்கொள்ள உருவாக்கப்பட்ட பேரவைக்குப் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா சரியான ஆதரவை வழங்கவில்லை. அது போலவே நல்லாட்சி காலத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்திருந்தார். அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான பனிப்போர் அதற்கான வாய்ப்பினை வழங்கவில்லை. இது போலவே சந்திரிகா அம்மையார் காலத்திலும் இருந்தது என்பது வரலாறாகும்.

மலையக மக்களின் குடியுரிமைப் பறிக்கப்பட்ட நிலையில், தந்தை செல்வா பாராளுமன்றத்திலிருந்து ராஜினாமா செய்தார். இடைத்தேர்தல் உடனடியாக நடைபெறும் என்று எதிர்பார்த்தாலும், தமிழ் மக்கள் மன நிலை என்ன? என்பதை நன்கு உணர்ந்திருந்த அரசு, ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகள் இழுத்தடித்து 1975 பெப்ரவரியில் தேர்தலை நடத்தியது. அப்போதும் பெரும் வாக்கு வித்தியாசத்தில் செல்வநாயகம் காங்கேசன்துறையில் வெற்றி பெறுகிறார். அப்போதுதான் அவர் இனி ஒரு நாடாக இருப்பதில் பொருளில்லை எனப் பிரகடனம் செய்தார்.

அந்த வெற்றியின் பின்னர், “இந்த வெற்றி தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கிறது. நமக்கென்று ஒரு நாடு வேண்டும். இனி நம் தலைவிதியை நாம்தான் நிர்ணயித்துக் கொள்ளவேண்டும், அந்நியரல்ல. நாம் விடுதலை பெறவேண்டும்” என்று அறைகூவல் விடுத்தார். அந்தப் பின்னணியில் இலங்கையில் முக்கிய வரலாற்றுத் திருப்பம் என்று சொல்லப்படும் தனி ஈழம் கோரும் வட்டுக்கோட்டை தீர்மானம், மே 1976இல் நிறைவேற்றப் படுகிறது. அதன் பின்னர் நடைபெற்றவைகள் அழிவுகளே!.

இந்த நிலையில்தான், பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற விடாப்பிடியிலிருந்து விலகி, சிறுபான்மையினருக்கெதிரான அதிகார, பௌத்த அடக்குமுறைகளிலிருந்து விலகக்கூடிய நிலைப்பாடு சிங்களவர்களிடம் இல்லை என்பது தெரிந்திருந்தாலும், அதிகாரப் பகிர்வுக்கு வழிகோலும் சட்டங்களை நிறைவேற்ற முனையுங்கள் என்று, இப்போதும் கோரிக் கொண்டிருக்கும் தமிழர் தரப்பு, இப்போதைய காலம் கடந்த ஞானங்களை ஏற்பது நியாயமாகுமா? என்ற கேள்வியை உருவாக்குகிறது.

சிங்களர்களின் மனிதாபிமானத்தைத் தட்டி எழுப்ப முடியும் என பதவியின் முடிவின் பின்னர் சந்திரிகா அம்மையார், மைத்திரிபால சிறிசேன போன்ற முன்னாள் ஜனாதிபதிகள் கருத்துகளை வெளியிடுகிறார்களா? அல்லது வேறு ஏதும் காரணங்கள் இருக்கின்றனவா? என்பதனை தமிழர்கள்தான் சிந்திக்க வேண்டும். ஏனெனில் தேவை எம்மிடமே இருக்கிறது.

தமிழர் அரசியலின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மற்றும் இனப்பிரச்சினை தொடர்பான படிப்பினைகள், இன்னமும் தமிழர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அத்தனை பாடங்களும், அவர்களைப் புடம்போட்டதா? என்பதே இப்போதும் இருக்கின்ற கேள்வி.

இவற்றுக்கான பதில்கள் இவ்வாறான ஞானங்களாலும், அவற்றால் எழும் கேள்விகளாலும் கிடைக்குமானால் சிறப்பேயாகும். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு, ஊழியர் சேமலாப நிதியப் பிரச்சினை போல் நாளுக்கு நாள் தோன்றிக் கொண்டிருக்கும் சிக்கல்களுக்குள் இவை நடைபெறவேண்டும்.!



Smt. லிதியா மயூரன், சுவிஸ்



## 24. ஹம்ஸபக்ஷ விநியோகஹ

ஷட்ஸங்கியாயாம் ஸேதுபந்தே நகரேகாங்கனேததா/
பிதானே ஹம்யபக்ஷஷோயாம் கதிதோ பரதாகமே//

**கருத்து**

| | |
|---|---|
| ஷட்ஸங்கியாயாம் | ஆறு எனும் எண் |
| ஸேதுபந்தே | அணை கட்டுதல் |
| நகரேகாங்கனேததா | நகத்தால் வரைதல் (குறி) |
| பிதானே | மூடுதல் |

**ஹம்யபக்ஷஷோயாம் கதிதோ பரதாகமே**



ஹம்ஸபக்ஷ விநியோகஹ

## 25. ஸந்தம்ச விநியோகஹ

உதரே பலிதானேச வ்றனே கீடே மஹாபயே । அர்சனே பஞ்ச சங்கியாயாம் ஸந்தம்ஷாக்யோ நியுஜ்யதே//

**கருத்து**

| | |
|---|---|
| உதரே பலிதானேச | தானம் செய்தல் |
| வ்றனே | காயம் |
| கீடே | புழு |
| மஹாபயே | பெரும்பயம் |
| அர்சனே | அர்ச்சனை செய்தல் |
| பஞ்ச சங்கியாயாம் | ஐந்து எனும் எண்ணிக்கை |



ஸந்தம்ச விநியோகஹ

## 26. முகுள விநியோகஹ

குமுதே போஜனே பஞ்சபாணே முத்ராதிதாரனே/ நாபௌச கதலீபுஷ்பே யுஜ்யதே முகுளஹ் கரஹ//

**கருத்து**

| | |
|---|---|
| குமுதே | நீர் அல்லி |
| போஜனே | சாப்பிடுதல் |
| பஞ்சபாணே | மன்மதனின் பஞ்சபாணங்கள் |
| முத்ராதிதாரனே | முத்திரை குத்துதல் |
| நாபௌச | தொப்புள் |
| கதலீபுஷ்பே | வாழைப் பூ |



முகுள விநியோகஹ

வசந்தன்

தமிழீழத்தின் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற, இனவாத முறுகல்களுக்கு மூலகாரணமாக இருந்தவர்கள் பௌத்த குருமார் என்பது, மறுக்க முடியாத ஒரு விடயமாகும். இந்த விவகாரத்தில் பொது பல சேனாவின் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்படமை என்பது, சட்டம் ஒழுங்கை மீறும் ஒரு செயல் என்பதைச் சட்டத் துறையினரும், நீதித் துறையினரும் உணர்ந்து கொள்வதற்கு அப்பால் அரசாங்கம், ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

கிழக்கு மீதான சிங்கள ஆதிக்கம் இன்று நேற்று நடக்கவில்லை. வரலாறு முழுவதும் நடந்திருக்கிறது. பண்டைய காலத்திலேயே அம்பாறைமீது, சிங்கள மன்னர்களின் படையெடுப்பும், ஆக்கிரமிப்பும் பல தடவைகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. தமிழரின் தொன்மை மிகுந்த அம்பாறைப் பிரதேசத்தைச் சிங்கள மன்னர் ஆக்கிரமித்து, தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். தமிழர்கள் பரந்து விரிந்து, மிக நெடிய காலம் முதல் புராதனமாக வாழ்ந்து வரும் நிலையில், அதனை சீர்குலைக்கும் வகையில் சிங்கள அரசின் ஆதிக்கச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

அம்பாறையில் உள்ள கதிரவெளிப் பிரதேசத்தில், கி.மு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு தொன்மையானப் பிரேத அடக்குமுறைச் சான்றுகள் கண்டுபிடிக்கப் பட்டன. கி.பி முதலாம் நூற்றாண்டு முதல், கி.பி 13 வரையான காலத்தில் கிழக்கில் தமிழ் அரச ஆட்சியில், தமிழ் சைவக் கலாசாரம், சமூக வளர்ச்சியில் முக்கியப் பங்களிப்பை வழங்கியது. ஆறாம் நூற்றாண்டில் திருக்கோணமலை, கோணேசுவரர் ஆலயத்திற்கும், திருக்கோவிலுக்கும் இடையில் படகு வழிப் போக்குவரத்து இடம்பெற்றது. யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னரே கிழக்கில் தமிழ்ச் சமூக எழுச்சி காணப்பட்டது.

இதேவேளை அம்பாறையில் உள்ள தமிழ்ப் பெயர்கள், தமிழ் பண்பாட்டை எடுத்துரைப்பதாக அமைகின்றன. இதற்குத் திருக்கோவில் என்ற ஊர்ப் பெயர் சிறந்த எடுத்துக்காட்டு. திருக்கோவில் தமிழ்ப் பண்பாட்டில் வழிபாட்டின்









# கரைந்து போகும் கிழக்கு



முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. கோயிலின் சிறப்பும், அது அமைந்த தலமும், ஆலயத்தை மாத்திரமின்றி ஊரையே திருக்கோவில் என அழைக்கக் காரணமானது. அத்துடன் இந்திய - தமிழக தலங்களுக்குக்கூட அமையாத பெயர் இது என்றும், இதன் புனிதமும், பெருமையும் மெச்சப்படுகிறது.

இங்குள்ள காரைதீவு என்பதும், தமிழ் மக்களின் பண்பாட்டில் வரலாற்றின் தொன்மையையும், பாரம்பரியத்தையும் உணர்த்துகிறது. தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் கரையோரத் தீவுகளைக் 'காரைதீவு' என அழைக்கின்றனர். குறிப்பாகத் தமிழர்களின் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று முனைகளில், இப்பெயரின் பயன்பாடு, பண்டைய காலம் தொட்டு காணப்படுகிறது. வடக்கில் யாழ்ப்பாணம், காரைதீவும், கிழக்கில் அம்பாறை, காரைதீவும், வடமேற்கில் புத்தளம், காரைதீவும் தமிழர் தாயக நிலத்தின் எல்லைகளாக அமைகின்றன. இவற்றின் வாழ்வு மற்றும் பண்பாட்டு முக்கியத்துவங்கள், தமிழர் பாரம்பரியத்தின் சீர்மைக்குத் தக்க உதாரணங்களாகவும் மேன்மை பெறுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைந்திருந்த அம்பாறைப் பிரதேசத்தைச் சிங்களக் குடியேற்றத்திற்காகவும், தமிழர் தாயகத்தைப் பலவீனப்படுத்தவும், சிங்கள ஆதிக்கத்திற்காகவும், தெற்கின் சில கிராமங்களை இணைத்து, தனி மாவட்டமாகவும், தனி தேர்தல் தொகுதியாகவும் மாற்றியது சிறிலங்கா அரசு.

அம்பாறையின் மொத்த பரப்பு 4431.4 சதுரக் கிலோமீற்றர். கரையோரப் பரப்பு 1253.8 சதுரக் கிலோமீற்றர் ஆகும். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இந்தப் பிரதேசத்தில், இஸ்லாமியர்கள் 44 வீதமும், சிங்களவர்கள் 37.5 வீதமும் வாழ, தமிழ் மக்கள் 18.3 வீதமாக சிறுபான்மையர் ஆக்கப்பட்டுள்ளனர். இதனால் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான இடத்தில், ஒரு இடத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதி வருவதே பெரும் சவாலாகி விட்டது.

1971, 1981, 2001 காலப் பகுதிகளில் அம்பாறையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புக்களின் பிரகாரம், தமிழர்களின் குடிம்பரம்பல் வீழ்ச்சியை இவ்வாறு அவதானிக்க முடிகின்றது. 1971இல் 30.18 விகிதம் வாழ்ந்த சிங்களவர்கள், 1981இல் 37.7 வீதமாக



அதிகரிக்கப்பட்டு, 2001இல் 39.3 வீதமாக அதிகரிக்கப்பட்டனர். ஆனால், தமிழர்கள் 1971இல் 22.85 வீதமாகவும், 1981இல் 20.37 வீதமாகவும்? 2001இல் 18 வீதமாகவும் குடிப்பரம்பல் வீழ்ச்சியடைச் செய்யப் பட்டனர். திட்டமிட்ட குடியேற்றங்களினால் தமிழர்களின் குடிப்பரம்பல் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை 1827இல் தமிழ் பேசுபவர்கள் 99.62 வீதம் வாழ, சிங்களம் பேசுபவர்கள் 0.38 வீதம் வாழ்ந்தனர். 1881இல் தமிழ் பேசுபவர்கள் 93.27 வீதம் வாழ, சிங்களம் பேசுபவர்கள் 4.75 வீதம் வாழ்ந்தனர். 1953இல் தமிழ் பேசுபவர்கள் 87.64 வீதம் வாழ, சிங்களம் பேசுபவர்கள் 11.52 வீதமாக அதிகரிக்கப்பட்டனர். 1961இல் அப்போது பிரதமராயிருந்த சிறிமாவோ பண்டார நாயக்கா, அம்பாறையை அவசர காலச் சட்டத்தின் கீழ் தனி மாவட்டமாகப் பிரித்தார். 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் இடம்பெறுவதற்கு முன்னர், பொலனறுவை மாவட்டத்தின் தெகியத்த கண்டிய என்ற பகுதியையும், பதுளை மாவட்டத்திலிருந்து பதியத்தலாவ என்ற பகுதியையும் சேர்ந்து, அம்பாறை என்ற மாவட்டத்தை இலங்கை அரசு உருவாக்கியது.



அம்பாறையில் 11 தமிழ்ப் பூர்வீகக் கிராமங்கள் பறிக்கப்பட்டுள்ளதாகவும், 2009இற்குப் பின்னர் கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில், பல புதிய இராணுவ முகாங்களை அரச படைகள் அமைத்திருப்பதாகவும் “சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மாநித்தலை வானொலி ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான 43 பேருக்குச் சொந்தமான 50 ஏக்கருக்கும், மேற்பட்ட தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்து, தன்வசப்படுத்தி, பாரிய கட்டடங்களை அமைத்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகளுக்குரிய ஆவணங்கள் அவர்களிடம் உள்ளன. விவசாயப் பண்ணையை அண்டிய மல்வத்தைப் பகுதியில் பாரிய இராணுவ



முகாம் உள்ள நிலையில், மீண்டும் அங்கு ஏன் பாரிய படைமுகாங்களை அமைக்க வேண்டும்? என்று மக்கள் கேள்வி எழுப்பினர். அத்துடன் நாவிதன்வெளிப் பிரதேசச் செயலாளர் பிரிவில், நீர்ப்பாசன செயற்பாட்டுக்குச் சொந்தமான பத்து ஏக்கர் காணிகளை அபகரித்து, இராணுவத்தை அங்கு நிலைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடந்த 2012ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெரிய நீலாவணை, கல்முனை, காரைதீவு, திருக்கோவில் பகுதிகளில் பாரிய இராணுவப் படை முகாங்கள் உருவாக்கப்பட்டன. 1983க்கு முன்னர், தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்து வந்த பகுதிகளில் தொட்டாச்சுருங்கி வட்டையும், மலையடி வட்டையும் முக்கியமானவை. இங்கு தொட்டாச்சுருங்கி வட்டையில் 1983 ஏக்கர் நிலமும், மலையடி வட்டையில் 197 ஏக்கர் நிலமும் சிங்கள, பௌத்தப் பிக்கு ஒருவரால் பறிக்கப்பட்டு, சிங்கள மக்களுக்கு வழங்கப் பட்டது. இந்தக் காணிகளுக்குரிய ஆதாரங்கள், ஆவணங்கள் தமிழ் மக்களிடம் உண்டு.

நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டு, தமிழ் மக்களிடம் காணிகளைக் கையளிக்க உத்தரவிடப்பட்ட போதும், இன்னும் காணிகள் மீள வழங்கப்படவில்லை. ஆனால், யுத்தம் முடிந்து, இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரும், தமிழ் மக்கள் நீதிமன்ற தீர்ப்பின்படிகூட தங்கள் காணிகளைப் பெற முயவில்லை. இந்தக் காணிகளில் பாரிய இராணுவமுகாங்களை இன்னும் அமைக்கும் திட்டம் அரசுக்கு இருப்பதாக மக்கள் அஞ்சுகின்றனர். அம்பாறையில் சிங்களக் குடியேற்றங்கள் ஒருபுறமும், இராணுவ முகாங்கள் மறுபுறமும் தமிழ் மக்களை மிகவும் ஒடுக்குகிறது.

அம்பாறையில் பல இடங்களில் தமிழ் மக்களின் தொல்லியல் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சில இடங்களை அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளுகிறோம் என்று கூறி, அரசு அபகரிப்பில் ஈடுபடுகிறது. தமிழர் தொல்லியல் ஆதாரங்களை மூடி மறைக்கும் செயலிலும் அரசு ஈடுபடுகிறது. அரசின் பௌத்த மத விவகார அமைச்சு, அம்பாறை மாவட்டத்தில் குறியாக இருக்கிறது. புதிய வளத்தாப்பிட்டியில் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் இராணுவம், பொலிஸார் சகிதம் காணி ஆக்கிரமிப்பு மேற்கொள்ள முன்னெடுக்கப் பட்ட நடவடிக்கை முறியடிக்கப்பட்டது.



**சிறுகதை**

**சபீனா சோமசுந்தரம்**




அனைத்து மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களுக்குமான ஒரு நாள் பயிற்சிப் பட்டறைக்கான அழைப்பு அகிலனுக்கு வந்திருந்தது.

**சென்ற மாத தொடர்ச்சி...**

வார இறுதியில் அந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறுவதால் தனியாக போகாமல், நண்பனோடு போய் வரலாம் என்று யோசித்து, நண்பன் ரஞ்சித்திடம் கேட்ட போது..

"மச்சான் எனக்கும் லீவு தானேடா.. போவம்.. பட் பைக்ல போவம்டா.. அதான் செம பீலா இருக்கும்.." என்று ஐடியா கொடுத்தான் ரஞ்சித்.

சரி என்று இருவரும் கிளம்பினார்கள். போன வேலை முடிந்து இருவரும் வெளிக்கிட்ட போது

"வீட்ட போய் சேர எப்பிடியும் விடியச்சாமம் ஆகும்டா.. சாப்பிட்டே வெளிக்கிடுவம்.. நல்லா ஹோட்டலா பாத்து நிப்பாட்டு மச்சான்.." என்றான் ரஞ்சித்.

இருவரும் சாப்பிடவென்று ஒரு ஹோட்டலில் நுழைந்தார்கள்.

"அகில் நீ சாப்பாடு ஓடர் பண்ணுடா.. நான் வொஸ்ரூம் போய்ட்டு வாறன்.." என்று சொல்லி விட்டு எழுந்தான் ரஞ்சித்.

கழிவறை இருக்கும் இடத்தை ஹோட்டல் ஊழியரிடம் கேட்டு தெரிந்து கொண்டு, உள்ளே போனான் ரஞ்சித். அந்த சொகுசு ஹோட்டலின் கழிவறைப் பகுதியில் வரிசையாக இருந்த நான்கைந்து அறையில் ஒன்றினுள் நுழைந்தான்.

அவன் பாட்டுக்கு போன வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்த கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அதன்பின் ஹலோ என்று ஆரம்பித்து ஒருவன், கைபேசியில் பேசிக்கொண்டிருப்பது ரஞ்சித்துக்குக் கேட்டது.

"ஸ்ஸப்பா இங்கயும் வந்து போன் தான் கதைக்கானுகள்.." என்று அலுத்துக் கொண்டு வந்த வேலையை முடிந்துவிட்டு, கதவைத் திறக்க போனவனின் காதில் விழுந்த தகவல் அவனை அப்படியே நிறுத்தியது.

கதவை திறக்காமல், மூச்சு விடும் சத்தமும் கேட்காமல் நின்று பக்கத்து கழிவறையில் இருந்து வந்த குரலைக் கேட்டான். முழுவதையும் கேட்ட ரஞ்சித்துக்குப் பதட்டத்தில் தலைசுற்றியது.

என்ன செய்வதென்று யோசித்தவன், எப்படியும் அந்தக் குரலுக்குரியவனின் முகத்தைக் கண்டிப்பாகப் பார்த்தே ஆக வேண்டும். பார்த்தால்தான் அடுத்து ஏதாவது செய்ய முடியும்.

அவனை தொடர்ந்து போவதென்றாலும், ஆளைப் பார்த்தால்தான் போகலாம்.. ஆனால் இப்ப வெளியே போனா, அவன் கதைச்ச எல்லாத்தையும் நான் கேட்டுட்டன் என்டு தெரிஞ்சிடும்..

பிறகு.. சத்தமே இல்லாம இங்கயே என்ர கழுத்த அறுத்து போட்டுட்டு போயிடுவான்.. என்ன செய்யலாம்..? என்று யோசித்த ரஞ்சித், பாண்ட் பொக்கற்றிலிருந்து கைபேசியையும், இயர்போனையும் எடுத்தான்.

இயர்போனை எடுத்து, கைபேசியில் மாட்டி, போனில் பாட்டை போட்டு காதில் மாட்டினான்.. பெருமூச்சொன்றை விட்டு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, கதவைத் திறந்து வெளியே வந்தான்.

கைகளைக் கழுவியபடி அங்கேயே நின்றான். தான் கேட்ட குரலுக்குரியவன் வெளியே வரும்வரை.

கதவைத் திறந்து ஒருவன் வெளியே வந்தான். ரஞ்சித் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு திரும்பி, அவன் முகத்தைத் தற்செயலாக திரும்பிப் பார்ப்பது போல் தெளிவாகப் பார்த்துப் புன்னகைத்து விட்டு அங்கிருந்து இயல்பாக வெளியேறினான்.

வெளியே வந்த ரஞ்சித் வேகமாக அகிலனுக்குப் பக்கத்தில் வந்து இருந்தான். நண்பனோடு சாதாரணமாக உரையாடுவது போல் முகத்தை வைத்துக் கொண்டு,

"அகில் உள்ள வொஷ்ரூமுல ஒருத்தன் நிண்டு போன் கதைச்சிட்டு நிக்கான்டா.. கொலை பண்ண போறானாம்.." என்றான்.

"டேய் என்னடா சொல்ற.. யார் ஆக்கள்..? எவடத்த..?" என்று கொஞ்சம் பதட்டத்தோடு அகிலன் கேட்க..

"மச்சான்.. மெதுவா கதடா.." என்று சொல்லி, உள்ளே தான் கேட்ட அனைத்தையும் அகிலனிடம் கூறினான் ரஞ்சித்.

முழுவதையும் கேட்ட அகிலன் "டேய் வடிவா கேட்டியா..? உண்மையா..? இல்லாட்டி குடிச்சிட்டு, சும்மா ஒருத்தன் வெட்டுவன், கொத்துவன் எண்டு கத்திட்டு நின்டத கேட்டு கன்பியூஸ் ஆகிட்டியா..?" என்றான்.

"இல்லடா தெளிவா கேட்டன்.. ஆக்கள் பொலிட்டிக்கல் பக்ரவுண்ட் உள்ளவங்கள் எண்டு தெரிஞ்சிது.." என்று ரஞ்சித் சொல்ல..

"எல்லாம் சரிடா.. ஆனா நாம என்ன செய்ய ஏலும்..? யார் ஆக்கள் எண்டு தெரியல.. அந்த கேர்ள் யாரெண்டும் தெரியல.. இது வேற டிஸ்ட்ரிக்ட் டா மச்சான்.. நம்மட ஊர் எண்டா பரவால்ல, ஓரளவுக்கு ஆக்கள தெரியும்.. தெளிவா ஒண்டும் தெரியாம பொலிஸ்ல சொல்லவும் ஏலா.." என்றான் அகிலன்.

இருவரும் மௌனமாய் யோசித்தனர்.

"சரி விடுடா.. நாங்க சாப்பிட்டு வெளிக்கிடுவம்.. அப்பிடி ஏதும் எண்டா பொலிஸ்க்கு எல்லாம் தெரியாமலா போகும்.." என்றான் அகிலன்

"ஆமா.. பொலிஸ் கடைசியா போய் செத்த பொடிய தானேடா கண்டுபிடிப்பாங்க.. பேசாம வெளிக்கிட மனசில்ல மச்சான்.." என்று கவலைப்பட்டான் ரஞ்சித்.

இருவரும் சாப்பிட்டு முடித்து வெளியே வந்தார்கள். அகிலன் பைக்கில் ஏறி உட்கார்ந்து

"ரஞ்சித்.. அவன் வெளில போய்ட்டானா..?" என்றான்.

"இல்லடா உள்ள தான் இருக்கிறான்.." என்று ரஞ்சித் சொல்லி முடிக்கவும், ரஞ்சித் குறிப்பிட்ட அந்த தொலைபேசி


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

உரையாடலுக்குச் சொந்தக்காரன் வெளியே வந்தான்.

ரஞ்சித் அகிலனிடம் திரும்பி "மச்சான் அவன்தான் ஆள்.. அந்த ரெட் கலர் ரீசேட்.." என்டு கண்ணசைவில் ரகசியமாகச் சொன்னான்.

தற்செயலாக அந்தப் பக்கம் திரும்புவது போல் திரும்பி, ரஞ்சித் அடையாளம் காட்டியவனை அகிலன் பார்த்தான். அதே நேரம் அவ்விடத்திற்கு வேகமாக ஒரு பைக் வந்து நின்றது.

இவர்கள் இருவரும் கண்காணித்துக் கொண்டு நின்றவன், அந்த பைக்கில் ஏறினான்.

வந்த பைக் அங்கு நின்றவனை ஏற்றிக் கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தது.

அவசரமாக ஹெல்மெட்டை எடுத்து மாட்டிய அகிலன்

"மச்சான் குயிக்கா பைக்கை எடுடா.. அவனுக்கு பின்னாலயே போ.." என்று சொல்லி வேகமாக நகர்ந்து பின் சீட்டில் அமர்ந்தான்.

அகிலன் சொன்ன வேகத்தில் ஒரே எட்டில் தாவி, பைக்கில் ஏறிய ரஞ்சித், ஹெல்மெட்டை போட்டுக் கொண்டு பைக்கை முறுக்கினான். பைக் அந்த பிரதான வீதியில் சீறிப் பாய்ந்தது.

அகிலனும், ரஞ்சித்தும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

பிரதான வீதி என்றாலும், இரண்டு பக்கமும் அடர்ந்த காட்டுப்பகுதி. வேறு மாவட்டங்களில் இருந்து வரும் வாகனங்கள் இந்த வீதியால் தான் உள்நுழைய வேண்டும்.

அதனால் அந்த வீதியில் வாகன போக்குவரத்து அதிகமாகவே இருக்கும். இருவரும் அவர்களைப் பின்தொடர்ந்து கொண்டே போனார்கள்.

அந்நேரம் ரஞ்சித்தின் கைபேசி சிணுங்கியது. யாரோ அழைக்கிறார்கள், யார்? என்று பார்க்கவென பைக்கின் வேகத்தை குறைத்தான் ரஞ்சித்.

பின்னாலிருந்த அகிலன் ரஞ்சித்தின் முதுகில் தட்டி "என்னடா..?" என்றான்

**தொடரும்...**






19
ஆண்டில்....
Radio - by - Phone
ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!
00 4934 5483411998
தொலைபேசி இலக்கத்தில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
நேரடி நிகழ்ச்சிகளில்
பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60
மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm
மகிழ்வுடன்....
அகரம்
அகர
தீபம்
ETR NEWS
ETR Music

கோமாளி





# காவேரிதான் சிங்காரி ரணிலும் கோட்டாவும் ஒருவரே !

இப்படி ஒரு பார்வை இந்தக் கோமாளிக்கு வர என்ன காரணம்? கோமாளித் தனமாய் அப்படி என்னத்தைக் கண்டுவிட்டாய்? என என்னை நீங்கள் கேட்க நினைப்பது இந்தக் கோமாளிக்கும் தெரிந்து விட்டது.

அப்ப 1915இல் சேறுப் பட்டத்துக்காகச் சிங்களக் காடையர் கூட்டங்களின் சிறைத் தண்டனையைப் போக்க 2ஆம் உலகப் போர்க் கால விமானக் குண்டு, நீர் மூழ்கி கப்பல் தாக்குதலால் உயிருக்காகப் பதுங்கு குழிகளில் உறங்கும் பொழுது, துணிச்சலுடன் இங்கிலாந்துக்குக் கடல் பயணம் செய்து, சிங்களத் தலைவர்களை விடுதலை பெற போராடி, வெற்றி கண்ட தமிழன் கோமாளிதானே!. கோமாளி அல்லாமல் ஏமாளியா? சோமாரியா?

பிரித்தானிய சாம்பிராச்சியத்தின் வரலாற்றில், உலகின் மிகப்பெரிய வரலாற்றையும் மிக நீண்டபலம் ஆட்சி நடத்திய விக்ரோரியா மகாராணியின் பாராட்டைப் பெற்ற ஒரே இலங்கையர், அதுவும் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட, கறுப்பு வெள்ளைக்காரத் துரையை 'ஏமாளி' என்றும், சோமாரி என்றும் நான் மட்டும் எப்படிச் சொல்லி விட முடியும்?

அன்று அந்தத் தமிழனால் விடுதலை பெற்ற சிங்களத் தலைமைகள், அடுத்த நிமிடமே ஒட்டு மொத்த தமிழ் இனத்தையும் பூண்டோடு அழிக்கத் தொடங்கி, இன்று 2023இல் தமிழ் இனத்தை முழுமையாக அழிக்க இடமளித்த, அதே கோமாளித் தனத்தின் வழி வந்த ஏமாளிகளால் என்பதை ஏனோ தமிழ் இன்னமும் அறியாமல் ஏமாளிகளாக ஏமாந்து அழிகிறது.

ஆனால், இந்தக் கோமாளிக்கு மட்டும் தெரிந்து விட்ட இரகசியத்தை, இப்போ எல்லாரும் அறிந்து கொள்வதற்காகச் சொல்லி விடுகிறேன். என்னை நம்பி நீங்கள் எச்சரிக்கையாக நடந்து, நல்லாய் வருவதும், என்னை நம்பாமல் நடந்து ஏமாளிகளாகி நாசமாய்ப் போவதும் உங்களின் தலைவிதி.

ஒரு சாம்பி(ப)லுக்காக அவர் பற்றிய மகான்மியம் இப்படிப் பதிவு செய்துள்ளது, "1915 கலவரத்தின் போதும், அதன் பின்னர் இலங்கையர்களுக்கு நீதி கேட்டும், அவர் ஆற்றிய பாத்திரம் மிகவும் முக்கியமானது. அது ஒரு முக்கிய வரலாற்றுப் பதிவு. 1915 இல் அவருக்கு வயது 64.

சேர் பொன் இராமநாதன், சிங்கள பௌத்த மறுமலர்ச்சியிலும் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. அதுபோல அவர் 1883 இல் நடந்த கொட்டாஞ்சேனைக் கலவரத்தைத்

தொடர்ந்து, 1885இல் அரசாங்க சபையில் வெசாக் நாளை விடுமுறை நாளாக அறிவிக்குமாறு அவர் உரையாற்றி, அந்த நாளை விடுமுறை நாளாக்கி வென்று கொடுத்தார். பௌத்த விகாரைகள் சட்டத்தை நிறைவேற்றுவதிலும் அவர் ஆற்றிய பாத்திரத்தை, இன்றும் சிங்கள ஆய்வாளர்கள் பலர் நன்றியுடன் நினைவு கூறுகின்றனர்.

சரியாக 130 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1886இல் பௌத்த பாடசாலைகளுக்கான அறக்கட்டளையை ஒல்கொட்டுடன் சேர்ந்து தொடக்கியது மட்டுமன்றி, அந்த அறக்கட்டளைக்கு 15 ஆயிரம் ரூபாவை அன்று அளித்தார். அந்த அறக்கட்டளையின் இணைப் பொருளாளர்களாக ஒல்கொட்டும், இராமநாதனும் நியமிக்கப்பட்டார்கள். ஆங்கிலேய மிஷனரி பாடசாலைகளுக்கு மாற்றாக, சுதேசப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் நோக்கில், இது சைவ - பௌத்த பாடசாலை அறக்கட்டளையாக இயங்கும் என்றே அவர் நம்பினார். ஆனால், அந்த அறக்கட்டளையின் மூலம் ஆனந்தா நாலந்தா - மகிந்தா - விசாகா போன்ற பௌத்த பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், பௌத்த நூலகங்கள், பௌத்த அச்சகம் ஆரம்பிக்கப்பட்டன. பௌத்த சஞ்சிகைகள், பௌத்த நூல்கள் வெளியிடப்பட்டன. அதேவேளை சிங்கள பௌத்தத்துக்கு அனைத்தும் செலவிடப்பட்ட போதும் அவர் எதிர்பார்த்தபடி தமிழ் - சைவ பாடசாலைகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை. இதன் விளைவாக அவர் தான் வழங்கிய 15 ஆயிரம் ரூபாவில், 5 ஆயிரம் ரூபாவை மட்டும் மீளப் பெற்றுக்கொண்டு, யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரியை ஆரம்பிக்கப் புறப்பட்டார்.

1923இல் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை அமைத்து, அதன் தலைவராகச் செயல்பட்டு, யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினார். யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பெண்கள் கல்லூரி, பரமேஸ்வரா ஆண்கள் கல்லூரி என்பன சிறந்த உதாரணங்கள்.

இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சியில் பாரிய பாத்திரமாற்றிய பிரம்மஞான சங்கம் உருவாக்கப்பட்டபோது, ஒல்கொட் போன்றே இராமநாதனும் அதன் ஸ்தாபகர்களில் ஒருவர். அவ்வமைப்பின் வளர்ச்சியில் பங்கெடுத்தார். அந்தச் சங்கத்தின் பிரச்சாரங்களின் போது “சிங்கள உதடுகள் சிங்களத்தில் பேசாது போனால் யார் தான் பேசுவர்? சொந்த மொழியன்றி எப்படி உயர் அறிவை வளர்த்துக்



"கொள்வது?" என்றார். "சிங்களத்தில் பெருமையுடன் பேச முன்வராத எவரும் சிங்களவர் அல்லர்" என்றார்.

இப்படித்தான் பிறந்த இனத்துக்கும், மக்களுக்கும் எதிராக இன வெறிச் சிங்கள இனத்துக்கும், கொலைகார புத்த மதத்துக்கும் அள்ளிக் கொடுத்த கடை வள்ளல், கொஞ்சமும் மனச்சாட்சி இல்லாமல் பிறந்து, வளர்ந்த மண்ணுக்கும், மக்களுக்கும் கிள்ளி வாய்க்கரியைப் போடுவது போல, இராமனாதன் கொடுத்தக் கொடைதான் பரமேசுவரா கல்லூரி.

அவருடைய சைவத் தொண்டுகளும், பாசமும் வெறும் போலி வேடங்கள் என்பது போல, அவருடைய அமெரிக்க இல்லுமினாட்டியான கென்றி ஓல்கொட் மற்றும் இலங்கையில் ஆரிய சிங்கள புத்த இனவெறி அரசியலின் பிதாமகன், அநகாரிய தர்மபாலாவுடன் ஆற்றிய சிங்களவருக்கான பொதுப் பணிகளும், அவற்றுக்காக அவர் அள்ளிக் கொடுத்த கொடைகளும் ஆற்றியப் பணிகளும் காட்டுகின்றன.

அவரும், அவர் சகோதரர் அருணாசலம் இருவர் மட்டுமே பிரித்தானிய அரசால் சேர் என்ற பிரபுகளுக்கு வழங்கப்பட்ட பட்டம் பெற்ற 2 தமிழர்கள். பெயரால் மட்டும் தமிழர்களாக வாழ்ந்த இருவரும், பிரித்தானிய பெண்களை மணந்த வெள்ளைக் காகங்கள். அதனால் தமிழர் வரலாற்றில் அவர்கள் கரைந்து போன காகங்கள். இவர்களால் தமிழும், சைவமும் கண்ட பலனை பரமேசுவரா இராமநாதன் கல்லூரிகளால் தமிழருக்குக் கிடைத்த நன்மைகள் பறைசாற்றுகின்றன.

மிகப் பெரும் தியாகத்தைச் சிங்கள தலைவர்களுக்காக, புத்த மத பிரச்சாரத்தக்காக செய்த தமிழ் தவப் புதல்வன் இராமனாதனின் அரத்தமும், சதையுமாகப் பிறப்பால வந்த தமிழ் மக்களும், சைவ -கிருத்துவ தமிழர்களும் இன்று வீடுகளையும், காணிகளையும் இழந்து, நாடற்றவர்களாக இனப்படு கொலைகளுக்கு உள்ளாகும் நிலைக்கு காரணம். இந்த பொன்பலம் சிற்றம்பலமாகச் சதைந்து, பேரம்பலத்தில் வானமே கூரையாகக் குட்டிச் சுவராகிப் போக, இந்தப் பொன்னம்பலம் பொன்னால் வேய்ந்த அம்பலம் அல்ல, பேராண்டிகளின் அம்பலமாகக் காரணம் ஏமாளித் தனமா? கோமாளித் தனமா அல்லது சோமாரித்தனமா?

**கோமாளி மீண்டும் வருவான்.**





BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
Flugtickete und hotel kann man auch hier buchen
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
الطيران العماني
OMAN AIR
QATAR AIRWAYS القطرية
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com

நந்தவனம் சந்திரசேகரன்

**சென்றமாத தொடர்ச்சி...**

மதிய வெயில் தலையில் சுள்ளென்று விழுந்த போது சூரியன் உச்சிக்கு வந்திருந்தான். இப்போது மறுபடியும் கடப்பாரையால் குத்தி விட, அடைப்பு விடுபட்டுச் சாக்கடை நீர் வேகமாக ஓடியது. ராமையா குழிக்குள் இருந்து வெளியே ஏறும் போது ராமச்சந்திரன் சாப்பாட்டுப் பொட்டலத்துடனும் இரண்டு தண்ணீர்ப் பாட்டிலுடனும் அங்கே வந்தார்.

"ஐயா இப்பத் தண்ணி நல்லாப் போவுது. இனி ஒன்னும் கோளாறு வராது" என்று ராமையா சொல்லவும், ராமச்சந்திரன் அப்பாடா! என்று பெருமூச்சு விட்டார்.

"ரொம்ப நன்றி ராமையா. சரியான நேரத்துல வந்து இதச் சரி பண்ணிக் கொடுத்திட்ட. இந்தா இந்தத் தண்ணிய வச்சிக் கைகாலக் கழுவிட்டு மொதல்ல சாப்பிடு" என்று தண்ணீர்ப் பாட்டிலை நீட்டினார்.



ராமையாவின் உடல் முழுவதும் சாக்கடைக் கழிவுகளும் மலமும் ஒட்டியிருந்தது. அதைப் பார்த்துப் பூஞ்சோலைக்கு மேலும் குமட்டிக் கொண்டு வந்தது.

"இந்த ஒத்த பாட்டில் தண்ணிய வச்சி எப்புடி இம்புட்டையும் கழுவுரதாம்?" பூஞ்சோலை கோவப்பட்டாள்.

"என்ன புள்ள பண்றது? இதக் கழுவ யாரு இங்க இப்பத் தண்ணி குடுக்கப் போறாங்க?" என்று சொல்லிக் கொண்டே உடம்பில் ஒட்டியிருந்த கழிவுகளைக் கைகளால் அகற்றினான்.

"இப்ப கைக்கு மட்டும் தண்ணிய ஊத்து. பொறவு ஊட்டாண்ட போய்க் குளிச்சிக்கலாம்" என்று சொல்லிக் கொண்டே மயங்கிக் கீழே விழுந்தான் ராமையா.

"யோவ், என்னய்யா பண்ணுது" என்று பூஞ்சோலை பதறினாள். ராமச்சந்திரனும் பயந்து போய் அருகே ஓடி வந்தார். ராமையா பேச்சு மூச்சின்றிக் கிடந்தான்.

சாக்கடைத் தண்ணியில இவ்வளவு நேரம் நின்னு வேலை செஞ்சதால மயக்கம் வந்திருக்கும். நீ ஒன்னும் பயப்படாத பூஞ்சோலை. இங்க பக்கத்துல தான் கவர்மெண்டு ஆஸ்பத்திரி இருக்கு. உடனே கொண்டு போவோம்" என்று சொல்லிவிட்டு, அடுத்து என்ன செய்வது என்று

யோசிக்க வேண்டிய நேரமில்லை என்று பைக்கை எடுத்து வந்து அருகில் நிறுத்தி, "மெல்லத் தூக்கு பூஞ்சோலை.

# சாமானியன்

பைக்குல உக்கார வச்சி, நான் முன்னால உக்காந்துக்கிறேன். நீ பின்னால சாய்ச்சி வச்சிப் பிடிச்சிக்க" என்று இருவரும் சேர்ந்து ராமையாவைத் தூக்கி வைத்தனர்.

பூஞ்சோலைக்கு அழுகையை அடக்க முடியாமல் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சலனமற்று இருந்த ராமையாவை பைக்கில் தூக்கி வைத்துக் கிளம்பினர்.

தன்னுடைய உடையெல்லாம் இப்படிச் சாக்கடையாகிறதே என்று வருத்தப்படாமல் ராமையாவை எப்படியாவது மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று மட்டுமே துடித்தார் ராமச்சந்திரன்.

சிரமப்பட்டு மருத்துவமனை முன் வந்து நின்றனர். மருத்துவமனைப் பணியாளர்கள் வேகமாக ஓடிந்து ராமையாவை ஸ்ட்ரெச்சரில் கிடத்தி அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு சென்றனர் .

ராமச்சந்திரன் பதட்டத்துடன் வெளியே நின்றார்.

ஒரு மணி நேரம் கழித்து அந்த மருத்துவமனையே அதிரும்படி,

"என்ன விட்டுட்டுப் பொயிட்டியே சாமி" என்று பூஞ்சோலை பெருங்குரலில் அலறினாள். ராமச்சந்திரன் திகைத்துப் போய் நின்றார்.

"எந்த ஒரு சாமானிய மக்களும் பாதிப்படைந்து விடக் கூடாது என்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது".

அனைத்துத் தொலைக் காட்சிகளிலும் நேரலையில் பேட்டி கொடுத்துத் கொண்டிருந்தார் சுகாதாரத் துறை அமைச்சர்.

**முற்றும்**




# உள்ளம்

## திறக்கும் உண்மைகள்





### இயற்கை

எங்கோ முகில்கூடும்
எங்கோ மழைபொழியும்
எங்கோ விளைநெல்
விளைந்திருக்கும் -இங்கே
அதுவென் பசியை
அழகாக நீக்கும்
இதுதான் இயற்கை
எழில்.

### காதல்....

கற்று தரும் காதல்
கன்னி மடிநிறையப்
பெற்று தரும்காதல்
பேரெல்லாம் - சற்று
மனமுவந்து நோக்கினால்
மண்வாழும் மக்கள்
இனத்திற்கே காதல்
இனிப்பு.

**- ரூபா அன்ரன், சுவிஸ்**



### பழமை

நவீன உலகம் இது.
பழமை எங்கே
நினைவிருக்க போகிறது?
புதியன வரவர,
பழையவை மறக்கப்படுகிறது.

வயதான முதியவர்களும்
பழமையில்
சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.
கலாசாரம், பண்பாடு
என்பதெல்லாம்
மறக்கடிக்கப்பட்டுள்ளது.

பழமைகள் எல்லாம்
மறக்க மறக்க
நாம் இழக்கிறோம்
வாழ்க்கையின்
பல அனுபவங்களை
சந்திக்கிறோம்
பல அவமானங்களை.

**-- நந்தனி, இலண்டன்**

"உள்ளம் திறக்கும் உண்மைகள்...." என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

# அகர கவிக்களம்....



### மௌனம்

பேசாதிருக்கும் போது
அனுமதியுங்கள்.
வார்த்தைகள் போல
மௌனங்களும்
அவரவர் உரிமை.

### நேரம்

நேரம் நேர்மையானது.
அதனால் தான் அது
யாருக்காகவும்
காத்திருப்பதில்லை.



### பயணம்

என் வாழ்வின்
எல்லா நொடிகளும்
நான் விரும்பும்
அனைத்து இடங்களுக்கும்
உன் நினைவுகளுடனே
பயணிக்கின்றேன்.
என்றேனும் உன்னுடனும்
பயணிப்பேன் என்ற
கனவுடன்...

### அவமானம்

அவமானமும், அனுபவமும்தான்
வாழ்க்கையில் மிக சிறந்த ஆசான்.
அவை கற்றுக்கொடுக்கும் போதனையை
எந்த விலையுயர்ந்த புத்தக்கமும்
கற்றுக்கொடுக்க போவதில்லை.

### வெற்றி

கோடிக் கற்களுக்கு மத்தியில் இருந்தாலும்
வைரங்கள் மங்கி போவதில்லை.
ஓடிக்கொண்டே இரு வெற்றி
உனது வரலாற்றில் சொல்லும்
கற்கள் யார்? வைரங்கள் யார்? என்று
மின்னுவதும், வாங்குவதும்
உன் கையில்தான் உள்ளது!

### பணம்

பாட்டாளி உழைப்பின்
வெகுமதி பணம்!
கூட்டாளிகள் சேர்ந்து சேமித்த
லாபம் பணம்!
மனமில்லா முட்டாள்களின்
கூடாரத்தில் குவிந்து கிடக்கிறாய்!
கொடைக் குணம் கொண்ட
எளியவரிடத்திலே இருக்க மறுக்கிறாய்!
பணம் பகட்டுதான் - அது
இல்லாதோர் வாழ்வு என்றும் இருட்டுதான்!

## அகதிகளாய் அவர்கள்..



தாய் மண்ணை விட்டு
விரட்டியடிக்கப்பட்டவர்கள் அவர்கள்...
தாய்மொழியின் வாசம்
மறக்கடிக்கப்பட்டவர்கள் அவர்கள்...
வாழ்வுரிமைதனைத்தேடி
அலைக்கழிக்கப்பட்டவர்கள் அவர்கள்...
சுதந்திரக்காற்று பறிக்கப்பட்டு
அடிமையாக்கப்பட்டவர்கள் அவர்கள்...
காணி நிலமின்றி அயல்தேசம்
துரத்தப்பட்டவர்கள் அவர்கள்...
பசியாற உணவின்றி, நீரின்றி
தவிக்கவிடப்பட்டவர்கள் அவர்கள்...

**- நா.மேனன்**

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

பாகம் : 36

இன்று எமது மொழி, நிலம், உரிமைகள் என சிறிது சிறிதாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வளவு நடந்தாலும் பெரும்பான்மையான மக்களுக்குப் பெரிய கவலை இல்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு எந்தப் பெரிய மனபலமும் இல்லை, ஏன்? ஆனால், சில இனக் குழுக்கள் தங்கள் அடையாளங்களைக் காக்க விட்டுக் கொடுக்காமல் போராடுகின்றனர். எது ஒரு மக்களை, தங்கள் அடையாளங்களைக் காக்கப் போராட வைக்கிறது? அதற்கான மனபலத்தை அவர்களுக்கு அளிப்பது எது? இவற்றுக்கான விடை காண்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம்

உலகத்தில் உள்ள அனைத்து மனிதர்களுக்கும் இயற்கையான மனிதப் பண்புகள் (Human Nature) என்பது பொதுவானதே என்பது, அறிவியலாளர்கள் ஏற்றுக்கொள்ளும் உண்மை. அதனால் இனங்களுக்கு இடையேயான போராட்ட மனபல வேறுபாடுகளை மரபணுக்கள் மூலம் விளக்க முடியாது.

ஒரு இனம் சுயாதீனமாகச் (Free Will) சிந்தித்து, தங்களை காக்க வேண்டும் என்று முடிவெடுத்துச் செயல்படுகிறார்கள். அவ்வாறு செயல்படாதவர்கள் அழிகிறார்கள் என்று நினைக்கலாம். இதுவும் தவறானது. ஒருவருக்கு சுயாதீனமாக செயல்படும் தன்மை (Free Will) இருக்கிறது என்பது சிக்கலானது. இதை சாம் ஆரிசு (Sam Harris) எளிதாக இவ்வாறு விளக்குவார். இவ்வுலகு என்பது காரண விளைவால் (Cause and effect) ஆனது. ஒரு காரணம் இல்லாமல் விளைவு ஏற்படாது. ஒருவரின் செயலுக்குக் காரணம் இருக்கிறது என்றால், அந்த காரணம்தான் அவரை இயக்குகிறது, சுயாதீனம் அல்ல. மாறாக ஒருவரின் இயக்கத்துக்கு எந்தக் காரணமும் இல்லை என்றால், அவர் குருட்டுத் தனமாக (Random) செயல்படுகிறார். அதையும் சுயாதீனம் என்று கூறமுடியாது. எப்படி பார்த்தாலும் சுயாதீனம் என்பது, ஒரு மாயை. ஒருவரை இயக்கும் மூல காரணத்தை, அவரின் உள்ளுக்குள் தேட முடியாது. அவ்வாறான காரணங்கள் முடிவில் வெளியிலிருந்துதான் வருகிறது.

அதனால் அடிப்படையில் ஒரு மக்கள் கூட்டம், தங்களது அடையாளத்தைக் காக்கிறது என்பதுகூட பிழையான பார்வை. அவ்வாறு கூறுவது அவர்களுக்கு சுயாதீன முடிவெடுக்கும் தன்மை உள்ளது என்று பொருளாகும்.



ஒரு மக்கள் கூட்டத்தைச் செயல்படுத்துவது, அவர்களின் மூலம் (Essence, Will). உதாரணமாக யூதர்களுக்கு யூத மதம், இந்துத்வாவாதிகளுக்கு இந்துத்துவம். மதவாதிகளுக்கு மட்டுமே மூலம் உண்டு என்பதல்ல, அனைவரையும் இயக்குவது அவர்கள் உள்வாங்கிய மூலம்தான். மூலம் என்பது அவர்களுக்கு அடையாளத்தையும், குணங்களையும், அவ்வடையாளத்தைக் காப்பதற்கான உணர்வுகளையும் அளிக்கிறது. இப்பண்புகள் மூலத்திற்கு மூலம் வேறுபடும். அடிப்படையில் மூலம்தான் அம்மக்களை அவ்வாறு செயல்பட வைக்கிறது. அவர்களின் அடையாளத்தைக் காக்கிறது. இவ்வாறு மூலம் தன்னையே காப்பாற்றிக் கொள்கிறது.

மூலம் என்பது திட்டமிட்டு உருவாக்கப் படுவதல்ல. இது வரலாற்றின் போக்கில் இயற்கையாகத் தானாக உருவாவது. அதவாது மூலம் என்பது, இயற்கையால் உருவாக்கப்படுகிறது. வில்லியம் சேம்சு (William James) இதற்கு ஒரு சிறந்த உதாரணம் தருகிறார். பண்டைய கிரேக்க நாட்டில், அருகருகே இருவேறு மக்கள் கூட்டம் இருந்தார்கள். இருவருக்கும் ஒரே மாதிரியான இயற்கை வளங்கள், சூழல் எல்லாமே அமைந்தன. ஆனால், ஒரு சமூகம் முன்னேறிய சமூகமாகும். இன்னொன்று மிகவும் பின்தங்கிய சமூகமாகவும் காணப்படுகின்றன. இதற்குக் காரணமாக அவர் கூறுவது, ஒரு சமூகத்தில் தற்செயலாக ஒரு சிறந்த தலைவர் தோன்றி, அவர்களின் மூலத்தை மாற்றி அமைத்து விட்டார். உலக வரலாறு என்பது, உன்னத மனிதர்களால் (Great Men Theory) உருவானது என்பது கார்லைல் (Carlyl ) அவர்களது பார்வை.

இன்று நாம் அழிந்து கொண்டிருப்பதற்கான காரணம் என்பது, பெரும்பாலான மக்களிடம் இருக்கும் மூலம்தான் அடிப்படை காரணம். அதுதான் அவர்களை அவ்வாறு செயல்பட வைக்கிறது. அடிப்படையில் நம்மை காத்துக்கொள்ள வேண்டுமானால், நாம் எது போன்ற மூலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அதிமுக்கிய கேள்வி. அம்மூலத்திற்கு இருக்க வேண்டியக் குறைந்தபட்ச பண்புகளாக நான் கருதுவன:

தன்னைக் காத்துக்கொள்ள அதியுச்ச மனபலத்தை மக்களுக்கு அளிக்க வேண்டும். தமிழர் அடையாளங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவதற்கான சிந்தனைத் திறனை




அளிக்கவேண்டும். சமூக ஒற்றுமையை வளர்க்க வேண்டும். அம்மூலம் வரலாற்றில் இயற்கையாக உருவானதாக இருக்கவேண்டும்.

இன்று தமிழ்த் தேசியத்திற்கு என்று ஒரு மூலம் இல்லை, பல்வேறு மூலங்கள் முன்மொழியப் பட்டிருக்கின்றன.

**மொழி :** இதற்கு மனபலம் இல்லை; மக்களே மொழியை அழிக்கிறார்கள். மொழியை விரும்பும் அனைவரும் தமிழ்த் தேசியம் பேசுவதில்லை.

**வள்ளுவர் :** மூலமாக முன்மொழியப்பட்டாலும், மக்களால் பெரிதாக எடுத்துக் கொள்ளப் படவில்லை. தனிமனித நெறிகள் குறளில் உள்ளது. ஆனால், ஒரு இனமாக தன்னைத் தக்கவைக்க எந்த வழிகாட்டலோ, அல்லது மனபலம் அளிப்பதோ இல்லை. மேலும் குறளை விரும்பும் அனைவரும் தமிழ்த்தேசியம் பேசுவதில்லை.

**பெரியார் :** திராவிட மாடலில்தான் தமிழர் அடையாளம் அழிந்து வருகிறது. பிழைப்பு வாதத்தால் இனத்தைக் காக்க முடியாது.

**மரபணு :** இதற்கும் ஒரு சமூகத்தின் மூலத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தனிமனிதப் பண்புகளில் மரபணுக்களுக்கு பெரும்பங்கு உண்டு. ஆனால், ஒரு சமூகத்தின் மூலம் மரபணுக்கள் வழியாக வருவதல்ல.

மூலத்திற்கான அனைத்து தகுதிகளும் கொண்ட ஒன்றே ஒன்றுதான் தமிழினத்திற்கு உள்ளது. அது பிரபாகரன் மட்டுமே!. பிரபாகரன் இயற்கையால் உருவாக்கப்பட்டவர், இயற்கையின் கொடை. புலி வீரர்களின் மனபலம் என்பது அளவிட முடியாதது, அதை உலகமே ஒப்புக்கொள்ளும். எது அவர்களை அவ்வளவு மனபலத்துடன் போராட வைத்தது? என்பதை, எந்த ஒரு தத்துவத்திற்குள்ளும் முழுமையாக அடக்க முடியாது.

பல உளவியல் காரணங்களைக் கூறலாம். ஆனால், அவை போதுமானதாக இருக்காது. முடிவில் அந்த விளக்கம் பிரபாகரன் என்ற ஒற்றைப் பெயரில் போய் நிற்கும். அவர்தான் தமிழினத்தின் மூலம். பிரபாகரன் என்ற மூலத்தின் இன்னொரு சிறப்பான பண்பு என்னவென்றால், மேலுள்ள மொழி, வள்ளுவர், சைவம், மற்ற மதங்கள், பகுத்தறிவுக் கொள்கைகள், சமூகநீதி என தமிழரின் அனைத்து அடையாளங்களையும் உள்ளடக்கியது.





யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2023ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. இப்ப விடுமுறைக் காலம் எண்டுறதால பானையில உள்ளதெல்லாம் அகப்பைக்கு வந்திருக்கும். ஏதோ இரண்டு மூண்டு கிழமையாவது எங்கையாவது சுத்திப்பார்த்திட்டு வரலாம் எண்டு வெளிக்கிட்டிருப்பியள். பலர் போய் திரும்பிவந்தும் இருப்பியள். இந்தமுறை கனபேர் ஊரில திருவிழாவாம் எண்டு போய்ட்டினம்.**

அங்க ஏதோ ஆயிரங்கால் மண்டபமாம், இரண்டாயிரம் நிகழ்வாம் எண்டு கன இடங்களில கதை அடிபபட்டுது. ஆனால் பாருங்கோ, ஊர்காத்த அம்மனுக்கு உவந்த பெயரை நீக்கிப்போட்டு, உத்ரயே காமாக்ஷி எண்டு புதுப்பெயர் வைச்சிருக்காம் கண்டியளோ. எட கொள்ளையில போக, அம்மன் கண்ணைக்குத்தப் போகுது. சந்தனம் மெத்தினால் தடவடா புறங்காலில எண்ட மாதிரி, காசு மெத்தினால் மாத்தடா பெயரை எண்டு ஈனத்தமிழன் பண்ணுற அலப்பறைக்கு ஒரு அளவில்லாமல் போகுது பாருங்கோ.

இப்பவெல்லாம் பெயர் என்ன ஊர் என்ன எல்லாத்திலையும் ஈழத்தமிழர் பலர் ஈனத்தமிழராக மாறி நிக்குறது வழமையாப் போச்சு கண்டியளோ. பெயர்லயும் ஊர்லயும் தான் வரலாறு ஒட்டியிருக்குது எண்ட அடிப்படை கூட பல தமிழருக்கு தெரியாமல் போட்டுது பாருங்கோ. சிங்களவன் எல்லா இடமும் புத்தர் சிலையை வைச்சு, அந்த ஊரின்ர பெயரையும், வீதிகளின்ர பெயரையும் மாத்துறான் எண்டால், எங்கட இலக்கியக் குஞ்சுகள் எல்லாம் எங்கட வரலாறையும் போராட்டத்தின் நியாயத்தையும் மாத்துதுகள் பாருங்கோ.

அதுக்கும் அப்பால படைப்பாளிகள் எண்டொரு கூட்டம் இருக்கு கண்டியளோ. அவை சிலர் படம், திரைப்படம் எண்டு எடுத்து எங்கட வரலாறைச் சீரழிச்சு, ஈழத்தமிழர் ஏதோ வில்லண்டத்துக்கு சிங்களவளோட சண்டைக்கு நிண்டமாதிரி தங்கட படைப்புகளை அடிச்சுவிடுகினம். இதெல்லாம் உண்மைக்கு புறம்பு எண்டாலும், உண்மைக்கு புறம்பா எதையாவது சொன்னாத்தானே உலக விருது, உள்ளூர் விருது எண்டு ஏதாவது கைக்கெட்டும். உண்மையைச் சொன்னால் எவன் விருது தரப்போறான் பாருங்கோ. அதனால பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே எண்டு எங்கட படைப்பாளிகள் பலர் மாறீட்டினம்.

உப்ப கிட்டடியில நான் பக்கத்து நாடொண்டுக்கு போகேக்க பாருங்கோ, "ஏதோ ஈழத்துத் திரைப்படம் வந்திருக்கலாம் வாறீரோ பாக்க எண்டு" என்ர சகலன் கேட்டார். ஈழத்துத் திரைப்படம் எண்ட உடன நானும் ஏதோ எல்லாளன் திரைப்படம் அல்லது சினம்கொள் திரைப்படம் அளவுக்கு இருக்குமாக்கும் எண்டு நினைச்சுக்கொண்டு போனன். எங்கட திரைப்படங்கள் எண்டா

அப்பிடித்தானே இருக்கும், இருக்கவேணும் பாருங்கோ. படம் தொடங்கும்போது எல்லாம் நல்லாத்தான் இருந்துது கண்டியளோ. ஆனால் போகப் போகத்தான் எனக்குத் தலையெல்லாம் வியர்க்க வெளிக்கிட்டுட்டுது பாருங்கோ.

நானும் ஊரில பிறந்துவளர்ந்து, முக்குப்பட்டு முனகுப்பட்டு எல்லாத்தையும் பாத்துத்தானே கடைசிக்காலத்தில பிள்ளையளோட இருப்பம் எண்டு இஞ்சால ஓடிவந்தநதனான். நான் உயிரோட வாழுறதுக்காக யாரோ ஒரு மாவீரன் தன்னுடைய குடும்பத்தை இழந்துவந்து போராடி விதையாகப்போயிருப்பான் கண்டியளோ. அப்படி ஒவ்வொருத்தனும் செய்த தியாகங்களால தான் கண்டியளோ, மிச்ச ஆக்கள் எஞ்சி உயிரோட இருக்கிறம் பாருங்கோ. ஆனால் எலக்கிய படைப்பாளிகள் உலகமோ இதையெல்லாம் வேறுவிதமாகத்தான் பாக்குது எண்டு நான் சொன்னால், நீங்கள் வெந்து தணிஞ்ச காடு மாதிரி என்னைப் பாக்கக்கூடாது பாருங்கோ.

அந்தத் திரைப்படத்தில பாருங்கோ; இந்திய உதவி ஈழத்தமிழருக்கு கிடைச்ச மாதிரி ஒரு குறியீடு காட்டப்பட்டது கண்டியளோ. நானறிய இந்திய இராணுவம் வரக்கு முன்னம் சோறும் பருப்பும் பொதிசெய்து கொண்டுவந்து, எங்கட தலையில இந்திய அரசு வீசினதுக்குப் பிறகு இந்தியா எதுவும் செய்யேல்லை கண்டியளோ. போதாக்குறைக்கு சமாதான காலப்பகுதியில சீலைவிக்குறம் எண்ட பெயரில உளவாளிகளை அனுப்பி இன்னும் விபரம் திரட்டுற வேலையைத்தான் இந்தியா செய்தது பாருங்கோ. அதுமட்டுமில்லாமல், தமிழரின்ர போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக பொருட்கள் ஏற்றிவந்த கப்பல்கள் எல்லாத்தையும் அழிச்சு மூழ்கடிச்சதுல இந்தியாக்கு பெரும் பங்கிற்கு பாருங்கோ.

இந்திய உதவி அரிசி எண்டுற குறியீடு சாதாரண விசயம்தானே எண்டு நீங்கள் நினைக்கலாம். படங்களில காட்சிதான் பாருங்கோ, வசனத்தை விட ஆயிரம் செய்திகளைச் சொல்லுறது. சரி உந்தப்படைப்பாளியிட்ட ஒரு கேள்வி கண்டியளோ. இந்தியா எங்களுக்கு ஏதோ விழுந்தடிச்சு உதவி செய்தமாதிரி காட்சிவைச்ச படைப்பாளி, இந்தியா எங்கட போராட்டத்தை அழிக்க முன்னின்ற செய்திகளைத் தாங்கிவந்த ஏதாவது ஒரு நாளிதழை அங்கின ஒரு மூலையில காட்டியிருக்கலாம். இப்ப கேட்டால் "பட்ஜெட்" இடிக்குது எண்டுவார் சிங்கம். பட்ஜெட் இடிக்குறதுக்கு நீர் ஏதோ ஜாக்கிச்சானை வைச்சு பெரும் பிரமாண்டச் செலவில


## யேர்மனியில் திருவள்ளுவர் சிலை



யேர்மனியின் டோட்முண்ட் நகரம் **Rheinische Str** வீதியில்
3 மீற்றர் உயரமான திருவள்ளுவர் சிலை அமைய இருக்கிறது.
இதற்கு ஏறக்குறைய 35,000 யூரோக்கள் செலவாகின்றது.
15,000 யூரோக்களை நகரசபை தருகிறது. மீதி 20,000
யூரோக்களுக்கான பங்களிப்பை உங்களிடம் கோரி நிற்கின்றோம்.
உங்களால் முடிந்த பங்களிப்பைத் தாருங்கள்.
மற்றவர்களுக்கும் இச்செய்தியைப் பரப்பி, அவர்களையும்
பங்களிப்பு செய்ய ஊக்குவியுங்கள். எல்லோரும் இணைந்து
திருவள்ளுவருக்குச் சிலை அமைப்போம்.
திருவள்ளுவர் புகழ் மேலும் மேலும் பரவட்டும்!

**Verein für tamilische Künstler e.V.**
**Volks Bank Dortmund Nord West**
**DE09 4406 0122 4086 4321 00**
**GENODEM1DNW**

**Paypal: paypalme/valluvar2023**

**ஆதரவு தாரீர்!**

**0151 633 63333 | 0176 4711 8711 | 0176 5507 43241 0157 5756 5305**

அடிதடி சண்டைக்காட்சிகள் நிறைந்த படம்தானே எடுத்தனீர்? இல்லைத் தெரியாமக்கேக்குறன் பாரும்.

சரி, அதைக்கூட விடுவம், தமிழகத்தில தஞ்சம் புகுந்த எங்கட சனத்தை இன்னும் திறந்தவெளிச் சிறைச்சாலையில வைச்சிருக்கிற இந்திய அரசு, ஏதாவது மேற்படிப்பு படிச்சு நல்ல வேலைக்கு கிடைச்சாலும் வேலை செய்ய முடியாத அளவுக்கு இரண்டாந் தலைமுறையைக் கூட வளரவிடாமல் வைச்சிருக்கிறது பற்றி இரண்டு நொடிகள் காட்டியிருக்கலாமே ..? நீர் காட்டமாட்டீர் ராசா. ஏனெண்டால் நீர் மேற்கத்தைய விருதுகளுக்கு ஆசைப்பட்டு படம் எடுத்தனீர் எண்டுறது பலருக்கும் தெரியும். அதுமட்டுமில்லாமல் ஈழத்தமிழரின்ர காசை வாங்கி, ஈழத்தமிழரின்ர வரலாறையே திரிபுபடுத்தி படம் வெளியிட்ட உமக்கு முன்னால இசுபீல்பெர்க் எல்லாம் தூசு.

அடுத்த விசயம் என்னவெண்டா பாருங்கோ, பதுங்குகுழிக்குள்ள புத்தபிரானை வைச்சு எங்கட ஆக்கள் வழிபடுறமாதிரி ஒரு காட்டுக் காட்டியிருக்கிறார் விண்ணர். நானறிஞ்ச வரைக்கும் பதுங்குகுழிக்குள்ள பாம்பு, பல்லி, பூரான் தான் இருந்திருக்கு. முதன்முதலா ஈழத்து பதுங்குகுழிக்குள்ள புத்தரை வைச்ச எங்கட வெடிவால் குருவிக்கு தமிழரெல்லாம் ஏதோ இளிச்சவாயர் போலத்தான் தென்படுது எண்டு நினைக்கிறன். புத்தருக்கும் எங்களுக்கும் சம்பந்தக் கலப்பும் இல்லை, சீதனப் பிரச்சனையும் இல்லை. ஆனால் சிறிலங்காவை பொறுத்த வரைக்கும் புத்தர் ஆதிக்கச் சின்னமாத்தான் மாறியிருக்கிறார் கண்டியளோ.

புத்தரை கடவுளா தமிழர் யாரும் இந்த நூற்றாண்டுல கும்பிட்டதாக நான் அறியேல்லை கண்டியளோ. எட கோதாரி, இவரின்ர கதையின்படி சண்டை நடக்கிற இடத்தில புத்தர் கோயிலும் இல்லை. அப்படியிருக்க தமிழரே வணங்காத புத்தரின் சிலை, தமிழரின் பதுங்குகுழிக்குள்ள இருக்கெண்டால் உந்தப்படைப்பாளியின்ர திறமையை என்ன சொல்லுறது கண்டியளோ ? உதில மட்டும் பட்ஜெட் இடிக்கேல்லை பாருங்கோ. சிவன், முருகன், வைரவர், அடங்கலாக இருந்த எந்தக்கடவுளும் தமிழனை காப்பாற்றேல்லை எண்டு ஆள் காட்ட விரும்புறாரோ அல்லது, புத்தர் மட்டும் தான் ஆட்சி அதிகாரமுள்ள கடவுள் எண்டு காட்ட வாராரோ எண்டு ஒரு மண்ணும் தெரியேல்லை பாருங்கோ.

உதுகளைத் தாண்டி மனுசர், ஏதோ படம் முடியேக்கையாவது நல்ல விசயம் சொல்லியிருப்பான் எண்டு பாத்தால், அது உலக மகா சரித்திரம் கண்டியளோ. “போரை நிப்பாட்டச் சொல்லி பொடியளட்ட சொல்லுங்கோ” எண்டு அந்த அம்மா சொல்லுறதோட படம் முடியுது பாருங்கோ. அட குறுக்கால போவானே, சிங்களவன் கூட அப்பிடி வசனம் எழுதமாட்டான் பாருங்கோ. 1956 இல நாங்களாடா போரை ஆரம்பிச்சம், 1977 இல நாங்களாடா சிங்களவனோட சண்டைக்குப் போனம்? ஏன் கனக்க, 2002 இல சமாதானம் பேசி வந்தவனோட கைகுலுக்கி, அமைதியாக இருந்த எங்களை வலுக்கட்டாயமாக சண்டைக்கு இழுத்தது ஆர்? இதெல்லாம் தெரியாமல் நீ ஏனடா கோதாரி படம் எடுக்கிறன், சட்டையை கழட்டுறன் எண்டு வெளிக்கிட்டாய்? எங்கட இனத்தின்ர வரலாறுகளில கைவைக்கிற அளவுக்கு உனக்கு விருதுகள் மேல காதல் பொங்குதா? நீ விருதுக்குத்தான் படம் எடுக்கவேணுமெண்டால் தாய்லாந்து பக்கம் போனியெண்டால் குறைஞ்ச காசுக்கு நல்ல படங்கள் எடுக்கலாம். நடிக்கிறதுக்கு இரண்டுபேர் போதும். நிறைய உழைக்கலாம். அதுகளை விட்டுட்டு ஏன்ராப்பா இரத்தமும் சதையுமான வரலாறைச் சிதைக்கிறாய்?

எங்கட மண்ணிலே பிறந்து, எங்கட மண்ணில நடக்குறதெல்லாத்தையும் பாத்தவர்களே வரலாறைத் திரிபுபடுத்துகிறார்கள் எண்டால், தமிழகத் திரைப்படங்களைத் தாறுமாறாக எடுக்கிறவனை நாங்கள் எப்பிடி எதிர்க்க முடியும் ? அல்லது புலம்பெயர்ந்த தமிழர்களின் அடுத்த சந்ததிகளை எப்பிடி வளரக்கமுடியும்?

எனக்கெண்டா ஒருவழியும் தெரியேல்லை கண்டியளோ..?

**அன்பு படர்ந்த கொம்பினிலே**
**ஒரு அகந்தைக் குரங்கு தாவும் – அதன்**
**அழகைக் குலைக்க மேவும்**
**கொம்பும் ஒடிந்து கொடியும் குலைந்து**
**குரங்கும் விழுந்து சாகும் – சிலர்**
**குணமும் இது போல் குறுகிப் போகும்**
**கிறுக்கு உலகமடா – தம்பி**
**தெரிந்து நடந்து கொள்ளடா**
**இதயம் திருந்த மருந்து சொல்லடா**

அப்ப வரட்டே

25 ஆம் ஆண்டில்




Kings
Niru
LEELA
Suryaa
LION
Maliban
Double Horse
Tilda

# importas

*International Foods & Beverages*

www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்

Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38, Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

TRS
Aachi
Maggi
PG tips
Rubicon
ELAKKIA
OKF

# வலியவன் வாழ்வான்
## எனும் சீன நடைமுறை

**சென்றமாத தொடர்ச்சி...**

### பிரதேச உரிமையைக் கோரும் சீனா

தைவான் மற்றும் கொங்கொங்காக இருந்தாலும் அல்லது திபெத் மற்றும் இந்தியா-சீனா எல்லையில் இருந்தாலும், சீனக் கம்யூனிசக் கட்சி தனது பிரதேச உரிமையைக் கோருவதைக் கைவிடாது என்றும், இதேபோல் தென்சீனக் கடலிலும், மத்திய ஆசிய நாடுகளான கசக்கசுதான் மற்றும் கிர்க்கிசுதான் இடையிலான எல்லையிலும் கூட, தனது உரிமையைக் கைவிடாது என்றும், இது ஒரு கொள்கை ரீதியான முதன்மையான நலன்கள் என்றும் சீனத்தரப்பில் வலுவாக முன்வைக்கப் படுகின்றன. இது சில நேரங்களில் பெருமை, தேசியவாதம், பிராந்திய உரிமை கோரல்கள், மாற்றப்பட்ட வரைபடங்கள் ஆகியவற்றில் மறைக்கப்படலாம். ஆனால் கொள்கை மாறாது என்று சீனா ஆணித்தரமாகக் கூறுகிறது. தேசிய பாதுகாப்பு குறித்த சீன அரசாங்கத்தின் 10 ஆவது வெள்ளை அறிக்கை (2019) அதன் முக்கிய நலன்களைப் பாதுகாப்பதற்கும், கிழக்கு சீனக் கடல், தென் சீனக் கடல் மற்றும் இந்தியாவுடனான அதன் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கும் அதன் உரிமையை உறுதிப்படுத்துகிறது.

### கடல் பிரதேசங்களின் மீதான விரிவாக்கம்

ஒருகாலத்தில் சீன நாட்டின் கடலோரப் பகுதிகளின் அருகில் வரையறை செய்யப்பட்டுள்ள இடங்களில் மட்டும் தனது நடவடிக்கைகளை செயல்படுத்திக் கொண்டிருந்த மக்கள் விடுதலை கடற்படை ராணுவமான திட்டம், தற்போது தொடர்ச்சியாகத் தனது செயல்பாடுகளை விரிவாக்கியுள்ளது. இந்தியப் பெருங்கடல், ஐரோப்பிய கடல், பசிபிக் பெருங்கடல் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட கூட்டுப் பயிற்சியில் சேர்ந்தது.

சீனவின் கடற்படை விரிவாக்கமானது, ஆழ்கடல் முழுவதும் உட்பட உலகளாவிய கடற்பரப்பில் இயங்குமாறு ஒரு கடற்படையைக் கட்டமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும். 2015இல் வெளியான பாதுகாப்பு அமைச்சகத்தின் வெள்ளை அறிக்கையில், சீனாவின் உத்திகளில் கடற்படையின் மிகப்பெரிய பங்கு குறித்து வலியுறுத்தப்பட்டது. அதன்பிறகு கொரிய தீபகற்பம், மத்திய தரைக் கடல், போல்டிக் கடல், பாரசீக வளைகுடா, மேற்கு பசிபிக் உள்ளிட்ட சில இடங்களுக்கு போர் கப்பல்களை அனுப்பி வைத்தது சீனா.

கடற்படை விரிவாக்கத்தின் விளைவாக இதுவரை அலாசுகா, அவுசுத்திரேலியா மற்றும்



இந்தியப் பெருங்கடல் ஆகியவற்றிற்கு அப்பால் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் காணப்பட்டிருக்கின்றன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சீனா தனது முதல் வெளிநாட்டு கடற்படைத் தளத்தைத் திசிபூத்தியில் செயற்படுத்தியது. அது வெளிநாட்டில் அதன் இராணுவ நிலைப்பாட்டை விரிவுபடுத்தும் ஒரு முக்கிய அம்சம் ஆகும்.

அதிபர் 'ஜி ஜின்பிங்' தலைமையில் கடற்படையை நவீனமாக்கும் திட்டத்தை முடுக்கி விட்டிருக்கிறது சீனா. இந்தத் திட்டத்தில் மேம்பட்ட போர்க் கப்பல்கள், விமானந் தாங்கிகள், நீர்மூழ்கி கப்பல்கள் ஆகியவற்றை உருவாக்குகிறது. உள்நாட்டு தயாரிப்பில் உருவான, முதல் விமானந் தாங்கியை மிகப் பிரபலமாக அறிமுகப்படுத்திய சில மாதங்களுக்கு பின்னர், கடந்த ஜுன் மாதத்தில் நவீன போர்க்கப்பலை அறிமுகப்படுத்தியது. இவை மூலமாக அனைத்துலக இராணுவ சக்தியாக சீனா உருவெடுப்பதை சுட்டிக்காட்டுகின்றன என குறிப்பிட்டன உள்ளூர் ஊடகங்கள். மேலும், ஒரே நேரத்தில் பல கடற்பகுதி களங்களில் இயங்கும் திறன் கொண்ட "நீல நீர்க் கடற்படை" உருவாக்க, சீனாவின் திட்டத்தின் ஒரு பகுதியாக மூன்றாவது அமைப்பு கட்டமைக்கப்பட்டு வருகிறது.

இந்திய மற்றும் பசிபிக் பெருங்கடல்களில் கட்டப்பட்டு வரும் சீனச் சாலைகள், துறைமுகங்கள் போன்றவை வணிகச் செயற்பாட்டில் பிராந்திய அளவில் பன்மடங்கு பயன்பாட்டைக் கொண்டுள்ளன. தனது வளரும் பொருளாதார நலன்களைப் பாதுகாக்கவும், சாலை திட்டத்திற்கும் ஒரு வலுவான கடற்படை தேவை என்று சீனா கூறுகிறது.

சீனாவின் பெரும்பகுதி கடல் வணிகம், தென்சீனக் கடல் வழியாகத்தான் செய்து வருகின்றது. இவற்றைத் தடுக்கவேண்டும் என்று அமெரிக்கவும், அதன் சார்பு நாடுகளும் விரும்புகின்றன. தென் சீனக் கடல் பகுதியிலுள்ள முதலாம் தீவு, சங்கிலி என்றழைக்கப்படும் யப்பான், தைவான் மற்றும் பிலிப்பைன்சு ஆகிய நாடுகளில் அமெரிக்காவின் ஆதிக்கம் மேலோங்காமல் பார்த்துக் கொள்கிறது. மேலும், அமெரிக்காவின் இராணுவத் தளங்கள் அமைந்துள்ள குவாம் வரை விரிந்துள்ள இரண்டாவது தீவுச் சங்கிலி என்றழைக்கப்படும் பகுதியிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு விமானங்கள் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்த சீனா திட்டமிட்டு வருகிறது.

சமீபத்திய அமெரிக்க காங்கிரசின் அறிக்கை, சீனாவின் "கட்டுப்படுத்தப்பட்ட ஆனால் வளர்ந்து வரும்" கடற்படை திறனை உயர்த்தி காட்டுகிறது. காலாவதியான வல்லரசு மனப்பான்மையைக் கொண்ட அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை, அதன் திறனைக் குறைப்பது மட்டுமின்றி, இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் மீண்டும் முழுவதுமாக கோலேச்சுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் சிரமங்களை உண்டாக்கலாம் என்று சிட்னி பல்கலைக்கழக அறிக்கை ஒன்று கூறுகிறது.

மூலம் : SouthChina Morning Post

**முற்றும்**



சண் தவராஜா

# ஈழத் தமிழ் அரசியல்



## இல்லாத ஊருக்கு, போகாத வழியில்...

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் விழலுக்கு இறைத்த நீராகவே இருப்பதைப் பார்க்க முடிகின்றது. முறையான தந்திரோபாயம் இன்மை, சீரான அணுகுமுறை இன்மை, மக்கள் மயப்பட்ட செயற்பாடுகள் இன்மை, அனைத்துக்கும் மேலாகத் தெளிவான கொள்கை இன்மை என்று இது விடயத்தில் பல அம்சங்கள் பாதகமாகவே தொடர்கின்றன.

50-50 என்ற முதலாவது கோரிக்கை பின்னர் சமஷ்டியாக மாறியது. அதன் நீட்சியாக அது ஒரு கட்டத்தில் தனிநாடு என்ற கோரிக்கையாக மாறியது. அந்தக் கோரிக்கையை வென்றெடுப்பதற்காக நடைபெற்ற ஆயுதப் போராட்டம் 2009இல் அவல முடிவை எட்டியமை அனைவரும் அறிந்த ஒன்று.

அந்த முடிவும், ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டமையும் அன்று வரையான ஈழத் தமிழ் அரசியலில் ஒரு எதிர்பாராத திருப்பம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எதிர்பாராத திருப்பங்கள் அரசியலில் எப்போதும் எதிர்பார்க்கக் கூடியவையே! அத்தகைய எதிர்பாராத வேளைகளுக்குமான தந்திரோபாயங்களையும் உள்ளடக்கியதே சிறந்த அரசியல் தலைமைக்கான பண்பு.

துர்வாய்ப்பாக, அத்தகைய ஒரு சிறந்த அரசியல் தலைமை தமிழர்களுக்குப் பல பத்தாண்டுகளாக இல்லாமல் போய்விட்டது. அதன் பலனை இன்றும் கூட ஈழத் தமிழினம் அனுபவிக்க வேண்டியுள்ளது.

வரலாற்றில் வெற்றிடங்கள் நீண்ட காலம் நீடிப்பதில்லை என்பது நியதி. ஆனால், ஈழத் தமிழ் இனத்தின் தலைமைக்கான வெற்றிடம் தொடர்ந்தும் நீடிப்பதற்கான காரணம் புரியவில்லை.

குலப் பெருமையும், குடிப் பெருமையும், ஆண்ட பரம்பரை என்ற பெருமையும் பேசும் தமிழினம், அத்தகைய குறுகிய வட்டங்களை விட்டு வெளியே வந்து சிந்திக்கும் பாங்கு கொண்ட தலைவர்களைப் பெற்றிருக்கவில்லை. ஓரிருவர் அவ்வாறு காலத்துக்குக் காலம் தோன்றினாலும் கூட, அவர்கள் மக்களின் வரவேற்பைப் பெறாமல் காணாமல் போய்விடும் நிலையே உள்ளது.

இன்றைய நிலையில் ஈழத் தமிழர் அரசியல் போக்கு பல முனைகளைக்

கொண்டதாக இருக்கிறது. இதில் எது மக்களின் உண்மையான விருப்பு? என்பதைக் கண்டறிவது கடினமான விடயம்.

பொதுவில், சிறிலங்காத் தீவினுள் தமிழர்களுக்கான ஒரு அதிகாரப் பரவல் அலகைப் பெற்றுக் கொள்வதே பெரும்பான்மை(?) அரசியல் கொள்கையாக உள்ளது. அது அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் முன்வைக்கும் மாகாண சபையா? அல்லது அதனை விடவும் அதிகாரங்கள் நிறைந்த வேறொரு முறைமையா? என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

வேறொரு சாராரைப் பொறுத்தவரை அவர்களுக்கு அரசியல் தீர்வில் உள்ள கரிசனையை விடவும், சிங்கள ஆட்சியாளர்களைப் பழிவாங்கிவிட வேண்டும் என்ற எண்ணமே அதிகமாக உள்ளது. தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற அதிகாரப் பகிர்வு விடயத்தை மட்டுமன்றி, தமிழ் மக்களின் எந்தவொரு நலனையும் விட்டுக் கொடுக்க அவர்கள் தயாராக உள்ளனர். புலம்பெயர் நாடுகளில் வாழும் இவர்கள் 'எதிர்ப்பு அரசியல்' என்ற ஒற்றைக் கொள்கையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

தனி ஈழம் என்ற பெயரில் அரசியல் நடத்துபவர்களும் இல்லாமல் இல்லை. ஆனால், இவர்களிடம் தங்கள் கோரிக்கையை வென்றெடுப்பதற்கான எந்த வரைபடமும் இல்லை, வேலைத் திட்டமும் இல்லை. இவர்கள் வெறும் வாய்ச் சொல் வீரர்கள் எனத் தெரிந்து கொண்டும், புலம்பெயர் நாடுகளில் ஒரு சிலர் இவர்களுக்கு ஆதரவு வழங்கவே செய்கின்றனர்.

இத்தகைய அரசியல் அரங்கில் தற்போது புதிதாக இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி தனது கடையை விரித்திருக்கின்றது. புலம்பெயர்ந்து வாழும் முன்னாள் விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ள இந்தியப் புலனாய்வுத் துறை, அவர்களை வைத்துக் கொண்டு ஒரு காய் நகர்த்தலை



மேற்கொண்டு வருகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் போக்கு தொடருகின்றது.

மறுபுறம், புலம்பெயர் அமைப்புகளை இலக்காகக் கொண்டு தமிழக பா.ஜா.க. தலைவர் அண்ணாமலை களமிறங்கி உள்ளார் அல்லது களமிறக்கப்பட்டு உள்ளார். அண்மைக் காலத்தில் சிறிலங்காவுக்கு அடுத்தடுத்துச் சென்றுவந்த அவர், தற்போது லண்டனிலும் கால்பதித்து உள்ளார். அங்கு ஈழத் தமிழ் அமைப்புகளைச் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளார்.

‘மூழ்குகின்ற கப்பலில் உள்ளவன் சிறு துரும்பையாவது எட்டிப் பிடித்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வான்’ என்பது இயற்கை. ஈழத் தமிழ் இனமும் அவ்வாறான ஒரு நிலையிலேயே இருக்கிறது என்பதுவும் யதார்த்தம். அதற்காக யாரை அணுகுவது என்பதில் ஒரு தெரிவு இருக்க வேண்டாமா?

பாசிச சிந்தாந்தைக் கொள்கையாகக் கொண்டுள்ள மோடி தலைமையிலான அரசாங்கம், சொந்த நாட்டு மக்களையே முறையாகப் பராமரிக்க முடியாமல் திணறுகிறது. தீவிர இந்துத்துவாக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில், சொந்த மக்களின் உரிமைகளையே நசுக்க முனையும் பா.ஜா.க. ஈழத் தமிழ் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தரும் என நம்புவது மிகப் பெரிய முட்டாள்தனம்.

அடுத்த ஆண்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, தொடர்ச்சியாக மூன்றாவது தடவையும் ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கும் பா.ஜா.க. தென்னிந்தியாவிலும் ஒரு சில ஆசனங்களையாவது கைப்பற்ற நினைக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் ஒரு ஆசனத்தையாவது பெற்றுவிட வேண்டும் எனத் துடியாய்த் துடிக்கின்றது.

‘திராவிட மாதிரி’ ஆட்சி நடைபெறும் தமிழகத்தில் தி.மு.க.வின் செல்வாக்கு அபரிமிதமாக உள்ள நிலையில், கலைஞர் கருணாநிதி தொடர்பில் ஈழத் தமிழர்களிடம் உள்ள பழைய கசப்புணர்வைத் தூசுத்தட்டி, வாக்கு அறுவடையைச் செய்து கொள்ள முடியும் என பா.ஜா.க. கணக்குப் போடுகிறது. அதன் ஒரு அங்கமே அண்ணாமலை வகையறாக்களின் ஈழத் தமிழர் மீதான திடீர்ப் பாசம்.

அண்ணாமலை போன்றோரை நம்பி, ஈழம் பெறலாம் என நினைப்பவர்களைப் பார்க்கையில் ‘கடல் வற்றிக் கருவாடு காயும் எனக் காத்திருந்து, குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு’ என்ற சொலவடையே ஞாபகத்துக்கு வருகிறது. மொத்தத்தில் தற்போதைய ஈழத் தமிழர் அரசியல் போக்குகளால் மக்களுக்கு எந்த நன்மையும் விளையப் போவதில்லை என்பதே கசப்பான உண்மை.




INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2023
Tamil Streetfestival
01.09.2023
Fr. 16:00 - 00:00
02.09.2023
SA. 11:00 - 00:00
03.09.2023
So. 12:00 - 19:00
Park der Partnerstädte
Bundesstraße 54
Bundesstraße 54
westentor
Rheinische Str.
Gemeinsam in Vielfalt Der Integrationsrat
SIVANDIGITAL SOUND&MORE
VMDO
Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V.
TKD
ortel MOBILE
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90

மனோ



# மாற்றி யோசி!

## மாறி வரும் உலகுடன் நாமும் மாறுவோம்

உக்கிரேயின் ரஷியப் போர் ஒரு உண்மையைத் தெளிவாக்கி வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளையும், ஈழத் தமிழரையும் அழித்தொழிக்க 40 வரையான உலக நாடுகளும், தமிழ் இனத் துரோகக் குழுக்கள், கட்சிகள் என மிகப் பெரிய எதிரிகள் படை 30 வருடங்களாகப் போராடி வெற்றி காண முடிந்தது. ஆயுதப் போரை அதே சகடதிகள் நிறுத்தி விடவில்லை. அப்படி ஒரு பெரிய பொய்யைச் சொல்லி நம்மையும், உலகத்தையும் அப்படி நம்ப வைக்கும் பிரச்சார உத்திகளும், சகல அரச படைகளும், நிறுவனங்களும் நம்ப வைக்க ஐ.நா. மனித உரிமைச் சபையில் இடம்பெறும் வாதங்களும், தீர்மானங்களும் அவற்றை உலக நாடுகள் வாக்களிக்கும் எண்ணிக்கையும் அய்யத்துக்கு இடமின்றி காட்டுகின்றன.

12 வருடங்களாக இலங்கை அரசின் சார்பாக வாதிட்ட பொய்கள், புரட்டுகள் வெளியாகி இன்றைய வெளி நாட்டமைச்சர் அலி சப்றியின் பேச்சுகளும், சுத்தமாக உதாசீனப் படுத்தப் பட்டதை, வாக்களித்த நாடுகளின் விவரங்கள் வெளிச்சப்படுத்தி விட்டன. அலி சப்றி சிங்களவரும் அல்ல, தமிழரும் அல்ல. அதனால் சிங்களப் பிரதிநிதிகள் பேசிய பொய், புரட்டுகளையே அவரும் பேசினார். முஸ்லிம் அரசியல்வாதிகளும், அரசின் சார்பாக அரசியல் செய்த முஸ்லிம்கள், தமிழரின் முதுகில் குத்தும் சம்பவம் 1947இல் இருந்தே வெளிஉறவு அமைச்சர்களாக சிங்கள ஆட்சியாளரால் நியமனம் பெற்ற அனைவருமே முஸ்லிம்கள் என்பதே வரலாறு.

கல்வி அமைச்சரான பதியுதீன் மொகட், உயர் கல்விக்குத் தரப்படுத்தல் மூலம் நாட்டின் பெரும் போருக்குக் காரணம் ஆனார். போரின் பொழுது புலிகளின் அமைப்புடன் உறவாடி, அழிக்கவும் உதவி செய்தவர் ரவூப் கக்கீம். பின்னர் கருணாவைப் பிரித்து, அரசுக்கு அடியாளாக மாற்றிவர்கள், கிழக்கு மாகாணத்தில் அப்பாவித் தமிழர்களை இலங்கை அரசுடன் இணைந்து, படுகொலைகளை நடத்தியவர்களில் முஸ்லிம்களின் பங்கை யாரும் மறுக்க, மறைக்க

முடியாது. அப்படிப் பார்த்தால் கோட்ட பாயாவின் சட்டத்தரணியாக அரசின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வெளிஉறவு அமைச்சர், வடக்கு கிழக்கைச் சேர்ந்தவரில்லை என்றாலும், முஸ்லிம் என்ற ஒரு தகுதியால் தமிழரின் அரசியலையும், புலிகளையும் எதிர்க்கிறார்.

இப்படிப் பட்டவர்களாலும், டக்லஸ் கருணா, சம்பந்தன், சுமந்திரன், ரெலோ ஈ.பி.ஆர்.எல் எஃப். புளொட் போன்ற பச்சோந்தி அரசியல்வாதிகள் ஆதரவுடன், தமிழ் இன அழிப்பு இன்னமும் தொடருகிறது. இந்திய சீன அமெரிக்க உளவுத் துறைகளின் கைக் கூலிகளாக அவர்கள் செயற்படுவதால், தமிழர் தேசம் சிங்கள பௌத்த பூமியாக மாற்றப்பட்டு விட்டது. அங்கே இனிமேல் எந்த விதத்திலும் தமிழ் இனத்தின் தாயகம் அல்லது அதை நோக்கிய எந்தவிதமான அரசியலும், யாராலும் முன்னெடுக்க முடியாது. முக்கியமாகக் கடந்த 76 ஆண்டுகளாக எமக்கு விடுதலை பாதுகாப்பு பெறப் போராடிய இவர்களும், இவர்களது முன்னோடிகளுமே.

எத்தனை பவ்வியமாக, இவர்கள் சிங்களத்தின் முன்னால் நாய்களைப் போல நடந்து கொள்ளும் அவர்களா எம் இனத்துக்கு விடியல் காண்பார்கள்?

எனவேதான் புலம்பெயர் ஈழத் தமிழரால் மட்டுமே முறியடிக்கப்பட்ட போராட்டம், புது வடிவில் முன்னெடுப்பது கட்டாயம் ஆகிறது. சிங்களம் இப்போ பிச்சைக்கார நாடாகி விட்டது. ஆண்கள் காய்ச்சிய கஞ்சியைப் போல, அரிசியைப் போடாமல் அனைவரும் மண்ணைப் போட்டுக் காய்ச்சியதால் இப்போ எல்லார் வாயிலும் மண் கஞ்சி. அதனால் இருந்த சொத்துப் பத்தெல்லாம் வெளிநாடுகளுக்கு விற்றும், கடைசியாகக் குரங்குகளையும், பெண்களையும் ஏற்றுமதி செய்யும் நாடாக சிங்கள தேசம் மாற்றிவிட்டது. மாற்றியது நாம் அல்ல, இந்தச் சிங்களத் தலைவர்கள்தான்.



இப்போ எல்லாருடைய கண்களையும் உறுத்துவது, சிங்களத்தால் விரட்டி அடிக்கப்பட்டு, உயிரைக் கையில் பிடித்து, பழைய சொப்பிங் பைகளுடன் வெளிநாடுகளில் 1980 தொடக்கம், அகதிகளாகத் தஞ்சம் அடைந்து, அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழர்களின் இன்றைய வளமான வாழ்வும், அவர்களின் சொத்துகள் மட்டுமே!.

அதனால் ஈழத் தமிழருக்காகப் பொது வெளியில் பேசிப் பிரபலம் அடைந்த வண.பிதா இமானுவல் அடிகளாரும், ஜெகத் கஸ்பார் அடிகளும் இலங்கை, இந்திய அரசுகளுக்கு ஆதரவாக புலம்பெயர் தமிழர் இலங்கை அரசின் கடன்களைப் பொறுப்பெடுத்து, தமிழர் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எனப் பேசி வருகிறார்கள்.

இவர்களில் யாரும் எமக்கானவர்களும் இல்லை. தமிழர் எனக் குறிப்பிடும் அளவுக்கு யோக்கியமானவர்களும் இல்லை.

எனவே, எம் இனத்துக்கான அரசியலையும், வருங்காலக் கட்டமைப்புகளையும் நாமே திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். கட்டமைப்பையும், திட்டமிடலையும் ஏற்கனவே மேதகு தலைவர் செய்து சாதித்துக் காட்டியவைதான். நாம் இப்போ அவற்றைச் செய்து முடிக்க வேண்டியது மட்டுமே. அதுவும் புலம்பெயர் நாடுகளில், புலம்பெயர் ஈழத் தமிழரால் மட்டுமே செய்யப்பட வேண்டியவை. செய்து முடிக்க ஒரு அறிவார்ந்த சகல துறைகளிலும் அறிவும், ஆர்வமும் கொண்ட நிபுணர்களைக் கொண்ட ஒரு இலட்சிய வெறி கொண்ட உறுப்பினர்கள், அவர்களின் உறுதி மிக்க செயலாற்றல் பின்வரும் விடயங்களை திட்டமிற்று செயற்படுத்த வேண்டும்:-

உலக அளவில் செயற்படும் வகையில் ஈழத் தமிழ் மக்களின் வங்கி உருவாக்கல்.





உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் வாழும் ஈழத் தமிழரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வங்கிச் சேவை கட்டமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் தமிழ் மக்களுக்கான சகல வங்கிக் கணக்குச் சேமிப்புக் கடன் வசதிகள் வழங்க வேண்டும்.

இது விடயமாக முன்னரும் அகரம் குறிப்பிட்டிருந்தது. ஆனால், அந்த விடயம் பெரிதாகப் பேசப்பட வில்லை. உக்கிரேயின் ரஷியப் போரில் பொருளாதாரம் ஒரு அடிப்படைக் காரணியாகவும், 50 வரையான நாடுகள் இணைந்து உக்கிரெயின் மூலமாக ரஷியாவைத் தாக்கி அழிப்பதில் காணப்படும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் வெறித்தனம், விடுதலைப் புலிகளை அழிப்பதில் காட்டிய தீவிரத்துக்கு நிகரானது.

எப்படிப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனப் பட்டியலிட்டுப் போராடினார்களோ, அதே விதத்தில் ரஷியாவைப் பயங்கரவாத நாடாகப் பிரகடனப்படுத்தி, அழித்துவிட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் போராடுவது யாருக்காக? உக்கிரேன் மக்களுக்காக என்றால், அதே வாதம் ஈழத் தமிழர் விடயத்தில் ஏன் வைக்கப்படவில்லை?. எமக்கு இன அழிப்பு ஒன்றே தீர்வாகப் போராடிய அரசுகள், எதற்காக ரஷியாவை அழிக்கப் போராட வேண்டும்?

அங்கே போர் சொல்லப்பட்ட உக்கரேன் மக்களின் ஜனநாயக உரிமை அல்ல. தனக்குச் சவாலாக விளங்கும் ரஷியாவை அழித்து, தானே உலகின் வல்லரசாக இருக்க வேண்டும் என்ற வெறி அமெரிக்காவை உக்கிரெயின் நேட்டோ மூலமாகப் போராட வைக்கிறது. ஈழப் போரின் மூலம் அமெரிக்கா, இலங்கையில் பாண்டார நாயக்கா கொலையில் பின்புலமாக இருந்ததை மிகச் சிலரே அறிவர்.

பின்னர் ஜே.ஆரை ஆட்சியில் அமர்த்தி, ரஷ்யா, இந்தியா மூலம் தடுத்ததால், இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி அமெரிக்கா காத்திருந்து, இப்போ முழு இலங்கையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சீனாவையும், இந்தியாவையும் ஒரு சேர கையாளும் வழிகளில் செல்கிறது. எனவே சம்பந்தனும், சுமந்திரனும் அமெரிக்காவின் செல்லப் பிள்ளைகளாகும் நிலை தோன்றி உள்ளது. அதனால் இந்தியாவின் 13ஆவது திருத்தமும், அமெரிக்காவால் சொல்லப்படாத சமஷ்டியும் சில அரசியல்வாதிகளின் பேசுப் பொருளாக உள்ளது. நக்கி வாழும் நாய்களுக்குச் செக்கிலும், சிவலிங்கத்திலும் வித்தியாசம் தெரியாது என்பார்கள். எங்களின் 75 வருடங்களுக்கும் அதிகமான போராட்டம், பலனற்றுப் போக செக்கும், சிவலிங்கமும் வேறு எனத் தெரிந்து கொள்ள முடியாதவர்களை நாம் நம்பியதால் வந்த அழிவுகளே!.

எமது மிகப் பெரும் சொத்தாக இருப்பது, எமது புலம்பெயர் மக்களின் உழைப்பு ஒன்றுதான். இலங்கையில் எமது சொத்துகளை 1905 தொடக்கம், 2009 வரை பறித்த அதே சிங்களம், ஒரு பெரும் மனித இன அழிப்பைச் செய்த பின்னரும், இராணு அடக்கு முறை ஆட்சி மூலம் நிலங்களைப் பறித்து, புத்த விகாரைகளைக் கட்டி, “இலங்கைச் சிங்களவரின் நாடு இது. இருந்தால் இரு, இல்லாவிட்டால் எங்காவது போய்விடு” எனப் பகிரங்கமாக அறிவித்து வருகிறது.

இனி ஈழத் தமிழ் இனத்தை மீட்க, புலம்பெயர் மக்களால்தான் முடியும். எனவே, எமது உழைப்பு அனைத்தையும் பலம் மிக்க ஆயுதமாக மாற்ற, உலக அளவில் எம்மால் வங்கிச் சேவையைத் திறம்பட நடத்த முடியும்.

வாரந்தோறும், மாதம் தோறும் நாம் பெறும் ஊதியம் அல்லது சம்பளத்தைக் கணக்கிட்டால், பல்லாயிரம் கோடி மில்லியன்களை கையாளும் கோடீசுவர்களாக எம் இனம் மாறிவிடும். பிறரின் தேவைக்காக வாழ்ந்து, மடியும் தேனீக்களாக அழியும் நிலையில் உள்ள ஈழத் தமிழ் இனம் ஒன்றாகச் சேர்வோம். பணத்தால் உலகை ஆழ்வோம், பணபலத்தால் தாய்மண் மீட்புப் போரை வெல்வோம்.



வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
21ஆம் ஆண்டில்....
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
ஆடி சிறப்புத்
தள்ளுபடி
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648
மாபெரும்
ராஜ
முத்திரை

க.பத்திநாதன், மட்டக்களப்பு





# கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் ஆற்றுகைகளும் அதன் இன்றைய நிலையும்

இன்றைய நவீன காலனித்துவ உலகம் மனிதனை இயற்கையிலிருந்து பிரித்துள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. மனித குலத்தின் பாரம்பரியங்கள், வாழ்க்கை முறைகள் மற்றும் கலாசார நடவடிக்கைகள் அனைத்தும் சீர்குலைந்துள்ளன. இதைத் தாமதமாகவேனும் உணர்ந்துகொண்டே மனிதச் சிந்தனையானது தன் இயல்பான வாழ்க்கை முறையை நோக்கி நகர முற்பட்டுள்ளது. பல இடங்களில் வியாபாரமாகவும், சில இடங்களில் திறமான கருத்தாடலாகவும் இது காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் தான் நவீன உலகில் மானுடவியல் ஆய்வுகளும் ஆய்வாளர்களும் தேவைப்படுகிறார்கள்.

இந்த நிலை நமது இலங்கைத் தீவையும் விட்டு வைக்கவில்லை. இருப்பினும், இந்த தீவு தேசத்தின் பூர்வீக மக்களின் வாழ்க்கை முறை, அவர்தம் சடங்கார்ந்த நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்கே உரித்தான நிகழ்த்து கலைகள் முதலான பண்பாட்டு அசைவுகள் முதலானவை இச்சூழ்நிலையை சாதகமாக எதிர்கொள்ள முடியும் என்ற பார்வையை நம் கண்முன் அகலித்துள்ளன.

கடலோர வேடர்கள் இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள தமிழ் பேசும் சமூகங்களின் ஒரு பிரிவினராக இன்றைய நிலையில் காணப்படுகின்றனர். அவர்கள் இலங்கை வேடர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களின் வழித்தோன்றல்களாகப் பரந்துள்ளனர். அதே சமயம் இன்றைய சூழலில் தூய (கலப்பற்ற) வேடர்களை அரிதாகவே காண முடிகின்றது. கட்டாயக் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் புவியியல் மாற்றங்களின் விளைவாக, அவர்கள் மற்ற சமூகங்களுடன் கலப்புற்ற வாழ்க்கை முறைகளையும், மரபுகளையும் கடைப்பிடிக்கின்றனர்.

கடலோர வேடர்களுக்கென்று தனி மொழி இருந்தாலும் இன்றைய சூழலில் அது பரவலாக இல்லை. அவர்களின் சடங்குகள் மற்றும் சடங்கார்ந்த ஆற்றுகைகளின் போது மட்டுமே அவர்கள் தங்கள் மொழியைப் பாவிக்கின்றனர். இவ்வகையான பண்புக்கூறுகளுடன் காணப்படுகின்ற இவர்கள் கிழக்கிலங்கையில் பாட்டாலிபுரம், இலக்கந்தை, சந்தோசபுரம், வெருகல், இலங்கைத்துறை மாங்கேணி, காயங்கேணி, பனிசங்கேணி, மதுரங்குளம், கிரிமிச்சை, உறியக்காடு, கதிரவெளி, கட்டுமுறிவு, அமந்தனாவெளி, வாகரை, புன்னைக்கிளங்கு, குஞ்சான்குளம், மட்டக்களப்பு வேடர் குடியிருப்பு (குடியிருப்பு), தளவாய், சித்தாங்கேணி, களுவன்கேணி, நாசிவன் தீவு, இறால் ஓடை, பொண்டுகள் சேனை, கொங்கனை, பால்ச்சேனை, திராய்மடு, வாகனேரி, முறுத்தானை, தம்பானை, கொக்கட்டிச்சோலை எனப் பல இடங்களில் கலப்புறாமலும் , கலப்புற்றும் காணப்படுகின்றனர்.

இலங்கை முழுவதும் பல சமூக கட்டமைப்புகளும் அவர்களுக்கென்று தனித்த கலாசாரம், சடங்குகள் மற்றும் நிகழ்த்துகலைகள் என்பன காணப்பட்டாலும், வேடர் சமூகத்தினரிடையே காணப்படும் நிகழ்த்து கலைகளான புலிக்கூத்து, கரடிக்கூத்து மற்றும் யானை கட்டுத்தல் ஆகியன சுயாதீனமானவையாகக்

காணப்படுகின்றன. மேலும், இந்த நிகழ்த்துக் கலைகள் வேடர் இன மக்களின் தொன்மச் சின்னங்களை வருங்கால சந்ததியினருக்குப் பாதுகாத்துக் கடத்தும் உயிரோட்டமான ஊடகமாகவும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் இந்நிகழ்வுகள் தொடர்பாக இன்றைய ஆய்வாளர்கள் சிலர் முன்வைக்கும் முரண்பட்ட கருத்துக்களையும், இனச்சிதைப்புக்களையும் தெளிவுபடுத்தும் நோக்கிலும், இவ்விடயங்களை ஆதாரத்துடன் கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் இக்கட்டுரையானது வரையப்பட்டுள்ளது.

கடலோர வேடுவர்களிடம் 'மாறா' எனும் வேட்டைத்தெய்வம் ஒன்று புழக்கத்தில் உண்டு. அது ஏழு வகைப்படும். வழமையாக இவர்கள் வேட்டைக்குச் செல்லும் போது குறித்த மாறாத்தெய்வத்தை வழிபட்டு, அதனிடம் அனுமதி பெற்றெ செல்வர். ஒரு நாள் வேடுவரும், வேட்டுவிச்சியும் வேட்டையாடும் பொருட்டு அடர்ந்த வனப்பகுதிக்குச் செல்கின்றனர். அன்று வழமைக்கு மாறாக தமது வேட்டைத் தெய்வத்தை வழிபட மறந்து சென்று விடுகின்றனர்.

இருவரும் தமது கூட்டாளிகள் சகிதம் வேட்டையாடிக்கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக ஒரு புலியிடம் சிக்கிக் கொள்கின்றனர். வேடுவன் தன்னால் முடிந்தளவு புலியிடம் சண்டையிட்டுப் பார்க்கின்றான். ஆனால் புலி அவனைக் கடித்து விடுகின்றது. உடனே அவன் மயக்கமுற்று விடுகின்றான். மயங்கிய தன் கணவனையும், ஏனையோரையும் புலியுடம் இருந்து பெரும் சிரத்தையுடன் வேட்டுவிச்சி காப்பாற்றி இருப்பிடம் கொண்டுவருகின்றாள்.



கிழக்கிலங்கைக் கரையோரத்தில் வாழ்ந்த பூர்வகுடிகள்
Image source - www.roar.media.com

உடனே குழுத்தலைவருக்கு குறித்த சம்பவம் எடுத்துச் செல்லப்படுகின்றது. பின்னர் அவர்கள் விட்ட பிழையினை அறிந்து கொள்கின்றனர். இவ்வாறே புலிக்கூத்து எனும் ஆற்றுகையானது நன்றி மறவாது ஒருவர் நடந்து கொள்ள வேண்டியதன் தேவையினை உணர்த்தி நிற்பதாகக் காணப்படுகின்றது.

இதில் காட்டில் வேட்டைக்காகப் பயன்படுத்தப்படும் வில் மற்றும் அம்பு முதலானவையும், இலை குலைகள், இயற்கை வர்ணங்கள் மற்றும் ஏழு வகையான தாளங்கள் பறையில் வாசித்தல் முதலான ஆற்றுகை அம்சங்கள் காணப்படுகின்றன.

கரடிக்கூத்தானதும் கடலோர வேடுவர்களிடம் காணப்படும் புலிக்கூத்தினைப் போன்ற ஆற்றுகை அம்சங்களைக் கொண்டதான ஓர் நிகழ்த்து வடிவமாகும். இது வேட்டையாடுதலுன் இன்னொரு பகுதியான தேனெடுத்தலுடன் தொடர்புடைய ஆற்றுகை வடிவமாகும். ஒரு வேட்டுவ குழு

HANDY SERVICE









Rheinische Str. 82, 44137
Dortmund, Germany
Phone: +49 163 9388808

தேனெடுக்க வனத்திற்குச் செல்கின்றனர். அவர்களைப் போல கரடியும் தேன் குடிக்கச் செல்கின்றது. கரடியைப் பின் தொடர்ந்து சென்றால் தேன் இருக்கு,ம் இடத்தினை இலகுவாக அடைந்து விட முடியும் எனும் தந்திரத்துடன் குறித்த கரடிக்குப் பின்னால் செல்கின்றனர்.

அவ்வாறு செல்லும் போது கரடி ஒரு மரப்பொந்தில் தேனை எடுத்து உண்கின்றது. அவ்வேளை குழுவில் இருந்த இளம் வேட்டைக்காரன் ஒருவன் தேனைக் கண்ட ஆவலினால் பொறுமையிழந்து ஓர் அரவத்தினை உண்டு பண்ணி விடுகின்றான். உடனே விழிப்படைந்த கரடியானது குழுவில் உள்ளவர்களைக் கடிக்கத் துரத்துகின்றது. பின்னர் ஒரு வழியாக தமது வேட்டைத் தெய்வமான மாறாவின் உதவியுடன் அவர்கள் தப்பித்து வீடு வந்து சேருகின்றனர். பொறுமையின் பலம், இயற்கை அனைத்து உயிர்களுக்குமானது எனும் வாழ்க்கை நெறியைக் கடத்துவதாக இவ்வாற்றுகையானது காணப்படும். இதிலும் ஏழுவகையான பறைத் தாளங்களே பாவிக்கப்படும்.

கடலோர வேடுவர்களிடம் வேட்டையாடுதலைத் தவிர்த்து சேனைப் பயிர்ச் செய்கைகளும் காணப்படுகின்றன. இன்றும் இவர்கள் வாழும் பெருவாரியான இடங்கள் சேனைப்பயிர்ச் செய்கைக்காக வெட்டப்பட்டு குடியேறிய இடங்களே ஆகும். அவ்வகையிலே யானை கட்டுதல் எனும் நிகழ்த்து வடிவமானது சேனைப்பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய ஆற்றுகை வடிவமாகும்.

வேடர் ஒருவர் சேனைப்பயிர்செய்கையின் பொருட்டு காடுகளை சீர் செய்யும் போதும், பயிர்களை விளைவித்த பின்பும் காட்டு யானைகளினால் உயிர் அச்சுறுத்தலுக்கும், விளை பயிர் அழிவுக்கும் உள்ளாகின்றனர். நீண்ட நாள் பிரயத்தனத்திற்குப் பின்னர் குறித்த யானையினை தன் வயப்படுத்திக் கொள்கின்றனர். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் யானைக்கு உதவியாக இவர்களும், இவர்களுக்கு உதவியாக யானையும் மாறி விடுகின்றன.

இவ்வாற்றுகையில் பறையுடன் சேர்த்து சங்கும் இசைக்கருவியாகப் பயன்படுத்தப் படுகின்றது. இயற்கையை நேசிப்பதன் மூலமும், இயற்கை வழி வாழ்க்கை முறையின் மூலமும் இயற்கையை தன்வயப்படுத்தி எதுவித சங்கடமும் இல்லாமல் வாழ முடியும் எனும் என்பதற்கு இவ்வாற்றுகை சான்றாகும்.

மேலும், மேற்சொல்லப்பட்டதான நிகழ்த்து கலைகளின் மூலம், இன்றைய நவீன உலகம் தேடும் நல்வாழ்வின் அடிப்படையான தொன்மக் குறியீடுகள், இயற்கையை விரும்பும் பழக்கவழக்கங்கள், இயற்கை வழி வாழ்க்கை நெறிமுறைகள் போன்றவற்றை இன்றுவரை கடைப்பிடித்து வருவதை அறிய முடிந்தது.

இன்றைய கால கட்டத்தில் கடலோர வேடுவர்கள் சார்ந்து ஆய்வை மேற்கொள்ளும் பலர் மேலோட்டமான கருத்துக்களையும், தன்னிச்சையான முடிவுகளையுமே முன்வைக்கின்றனர். இவ்வாறான முடிவுகளை அம்பலப்படுத்துவதையும், அவற்றை ஆய்வுத் துறைக்கு எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும், காரண காரியமாக வெளிப்படுத்துவதையும் அறிந்து கொள்ள





**இலங்கை வேடுவர்கள்**

வேண்டிய தேவை தற்காலத்தில் நன்குணரப் பட்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட ஆய்வாளர்களின் ஆய்வுச் செயல்பாடானது கடலோர வேடுவர்களின் கலை வடிவங்களை அவர்களிடமிருந்து பிரிக்கிறது. மேலும் அவர்களின் கலாசார தொன்மங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை. தமிழ் காலனித்துவமானது நிகழ்த்து கலை வடிவங்களில் அறிமுகப்படுத்தப் பட்டு சீர்குலைக்கப்படுகிறது. உதாரணமாக இன்றைய புலிக்கூத்து நிகழ்வு பற்றியதான ஒரு வேட்டுவ ஆற்றுகை நெறியாளரின் (கப்புறாலை) கருத்து இவ்வாறு அமைகின்றது. எங்கள் நடிப்பு அவர்கள் சொல்வது போல் இல்லை. இதுபோன்ற நிகழ்ச்சிகள் மூலம் நம் முன்னோர்களின் வேட்டையாடலையும், இயற்கையான வாழ்க்கை முறையையும் தொடர்கிறோம். எங்கள் மொழி அவர்கள் பேசும் தமிழ் மொழி அல்ல. அவர்கள் பயன்படுத்தியதைப் போன்ற தாள அமைப்புகளோ பாடல் வடிவங்களோ எங்கள் புலிகூத்தில் இல்லை. இது முழுக்க முழுக்க 'பறை' இசை பயன்படுத்தப்படும் ஒரு கலை வடிவமாகவே காணப்படுகின்றது.

இதுபோன்ற நிகழ்வுகளில் வேட்டையாடுவதற்கு உதவும் 'மாறா' (இதில் ஏழு வகை உண்டு) கடவுளை நினைவு கூர்கின்றோம். அந்த கடவுளுக்குப் பாடும் பறை இசையையே ஆற்றுக்கைக்கும் பயன்படுத்துவோம். இத்தகைய முறைகளில் புலிக்கூத்து, கரடிக் கூத்து, யானை கட்டுத்தல் போன்ற கலை வடிவங்கள் எங்களிடம் இருந்தன.

இவ்வாறு குறித்த கப்புறாலையின் கருத்தில் இருந்து பல உண்மைச் சிதைவுகள் வெளிச்சத்திற்கு வருகின்றன. அதாவது புலிக்கூத்தும் அதன் ஆற்றுகை அம்சங்களும் முற்றுமுழுதாக தமிழ்ப்படுத்தப் பட்ட வடிவத்திலேயே இன்றைய உலகிற்கு காட்சிப்படுத்தப் படுகின்றது. இங்குதான் நாம் தமிழ்க் காலனியத்தின் செல்வாக்கினைக் காணமுடியும். 'தன தத்தோம் புலிக்கூத்து' என்று சொல்லி மத்தளத்தில் தாளம் இசைகின்றனர். ஆரியக்கூத்துக்களில் பாவிக்கப்படும் வில்லம்புடன் ஆற்றுகையாளர்கள் தோன்றுகின்றனர். இங்குதான் வேடர்களின் மொழி, பண்பாடு என்பவற்றை தமிழ்க்காலனியம் உட்செரித்து விட்டதை நன்கு அவதானிக்க முடிகின்றது. இது இவ்வாறிருக்க கரடிக்கூத்து மற்றும் யானை கட்டுதல் முதலானவை கவனித்தில் கொள்ளப்படுவதே இல்லை.

ஆதிகால தொன்மங்கள் மற்றும் குறியீடுகள் இன்று உலகம் முழுவதும் ஏதோ ஒரு வகையில் பரவி வருகிறது. காலனித்துவ எதிர்ப்பு உரையாடல்கள் மற்றும் சமூக-கலாசார அரசியல் ஆய்வுகள் போன்றவை பழங்குடி மக்களின் கலை வெளிப்பாட்டை மக்கள் மத்தியில் பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். பல்கலைக் கழகங்களும் கலை அமைப்புகளும் அதற்கேற்ப செயல்பட வேண்டும். ஆனால் நவீன கல்வியின் தாக்கம், காலனித்துவ சிந்தனை, மேலாதிக்க மனப்பான்மை மற்றும் பல காரணிகளும் கடலோர வேடர்களின் கலாசார சீரழிவுக்கு பங்களிப்புச் செய்வனவாகவே பெரும்பாலும் இன்றைய காலத்தில் காணப்படுவது பெரும் கவலைக்குரியதே.





நந்தவனம் சந்திரசேகரன்

# உண்மைகள் உணரப்படுமா?

இலங்கையிலிருந்து ஐரோப்பா தேசத்திற்குப் புலம்பெயர்ந்த கலைஞர் ஒருவர். இவர் நாடகம், கவிதை, கட்டுரை எனப் பன்முகத் திறமையுடன் தன்னைக் கலையுலகுக்கு அடையாளப் படுத்திக் கொண்டவர். இவருடன் அண்மையில் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் பெயர் வேண்டாம், அவரோடு நிகழ்த்திய உரையாடலின் பிரதிபலிப்பை மட்டுமே இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கலைத்துறையில் சிறந்து விளங்கக் கூடிய அவருக்கான வாய்ப்புகள் இன்று குறைந்து விட்டதாகவும், புலம்பெயர்ந்த தமிழர்கள் தென்னிந்தியக் கலைஞர்களுக்கேக் கூடுதலாக ஆதரவு கொடுக்கத் தொடங்கி விட்டார்கள் என்றும், மண்ணின் உணர்வுள்ள கொஞ்ச பேர்தான் தனக்கு ஆதரவு தருவதாகத் தனது வருத்தத்தைத் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு வரையில் புலம்பெயர்ந்த தேசங்களில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளில் புலம்பெயர்ந்த கலைஞர்களுக்கு நல்ல அங்கீகாரமும், வருமானமும் இருந்தது. அப்போது எல்லாம் மண்ணின் உணர்வுடன் எல்லோரும் இயங்கி வந்தோம். தென்னிந்தியக் கலைஞர்களுக்கும், தென்னிந்தியத் தொலைக்காட்சிகளுக்கும் இங்கே பெரிதாக மதிப்பளிக்காத சூழலே இருந்தது. ஆனால், கடந்த பத்தாண்டுகளில் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது என்று தற்போதைய உண்மை நிலவரத்தையும் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களில் எத்தனையோ திறமையான கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கான அங்கீகாரம் குறைந்து போனது ஏன்? அவர்களுக்கான



வாய்ப்புகளை வழங்க மறுக்கும் காரணி என்ன? இதைக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்று புலம்பெயர் தமிழர்களின் எல்லோருடைய இல்லங்களிலும், தென்னிந்தியத் தொலைக்காட்சிகள் ஊடுருவி விட்டன. அதன்மூலம் தென்னிந்தியக் கலைஞர்களோடு உறவாட வேண்டும், குறைந்தபட்சம் அவர்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டு, முகநூலில் பதிவிடுவதே வாழ்நாள் சாதனை என்ற மனநிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் என்பதும் ஒரு உண்மையே!.

புலம்பெயர்ந்த தமிழர்களுக்குத் தென்னிந்தியக் கலைஞர்களின் மீது தற்போது தனித்துவமான ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டது. இப்போது மட்டுமல்ல, இது காலங்காலமாக உள்ளதுதான் என்று சிலர் முன்மொழியலாம். ஆனால், அப்போதெல்லம் ஈழத்துக் கலைஞர்களுக்கு உரிய அங்கீகாரமும் இருந்ததே!.

திரைப்பட மோகத்தின் மீதான ஈர்ப்பால், அந்தத் துறையில் இயங்குபவர்களின் மீதும் ஈர்ப்பு அதீதமாகி விட்டது. இது தவறு என்று சொல்ல வரவில்லை. குறைந்தபட்சம் பத்து விழுக்காடு அளவிலாவது உள்ளூர்க் கலைஞர்களுக்கும், மண் சார்ந்து இயங்கும் கலைஞர்களுக்கும் வாய்ப்புகள் வழங்குவதைக் கடமையாகக் கொள்ள வேண்டாமா?

தென்னிந்தியக் கலைஞர்களை ஆதரிப்பது பெரிய தவறா? என்று கேட்பதும் சரிதான். ஆனால், தென்னிந்தியத் திரைத்துறையில் ஈழத்துக் கலைஞர்களுக்கு எத்தனை விழுக்காடு வாய்ப்புகள் வழங்கப்படுகிறது? நூற்றில் ஒருவருக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கலாம்.

கடந்த இரண்டு மாதங்களில் ஏ.ஆர்.ரகுமான், அனிருத், இளையராஜா இவர்கள் மூன்று பேருமே ஜெர்மனியில் இசைக்கச்சேரி நடத்தியிருக்கிறார்கள். மூவருக்குமே நல்ல கூட்டம். இதில் எத்தனை ஈழத்துக் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப் பட்டது? இந்த இசைக் கலைஞர்களைக் கொண்டாடுவது உங்களின் உரிமை. அதே நேரத்தில் உங்கள் திறமைக்கும் ஒரு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லையே! அல்லது அதுபற்றிச் சிந்திப்பதும் இல்லையே ஏன்?

தென்னிந்தியத் தமிழத் திரையுலகில் லைக்கா நிறுவனம் கால்பதிக்க முன்வந்தபோது, அவர்கள் ராஜபட்சேவின் ஆட்கள், அவர்களை இங்கே கால்பதிக்க விடக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்த தமிழ்த் திரையுலகம்,




இன்று லைக்கா நிறுவனத்தை மட்டுமே கூடுதலாக நம்பியிருக்கிறது.

தென்னிந்தியத் தமிழ்த் திரையுலகில் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் முக்கியத் திரைப்படங்கள் அனைத்தும், லைக்கா தயாரிப்புதான். ஒரு ஈழத்தமிழன் உருவாக்கிய நிறுவனம், தமிழ்நாட்டில் கால் பதித்திருப்பது பெருமைதான் என்றாலும், லைக்கா நிறுவனம் தயாரிக்கும் திரைப்படங்களில் கூட ஈழத்துக் கலைஞர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதில்லையே! இவர்கள் நினைத்தால் இவர்களின் தயாரிப்பில் வெளிவரும் படங்களில், ஈழத்தமிழர்களின் பங்களிப்பும் கட்டாயம் இருக்க வேண்டும் என்று சொன்னால் யாரும் மறுக்கப் போவதில்லையே!

ஆனால், அவர்கள் அப்படி ஒரு முடிவை எடுக்க மாட்டார்கள். ஏனென்றால், அவர்களுக்கு வியாபாரம் முக்கியம். ஆயிரம் கோடி முதலீடு செய்தால், மூன்றாயிரம் கோடி எடுக்க வேண்டும்.

இதுமட்டுமே அவர்களின் நோக்கம். இவர்கள் நினைத்தால் திறமையான ஈழத்துக் கலைஞர்களை ஒருங்கிணைத்து, ஒரு படத்தைத் தயாரிக்கலாம். அதையும் செய்யவில்லையே ஏன்? அல்லது தட்டுத்தடுமாறி, முட்டிமோதி ஈழத்துக் கலைஞர்களால் தயாரிக்கப்படும் படங்களை வாங்கி, அவர்களின் முயற்சிக்குத் துணையாக நிற்கலாமே! அதையும் செய்வதில்லையே ஏன்? எல்லாவற்றுக்குப் பின்னால் ஒரு நுண் அரசியல் இருக்கிறது.

‘என் தொப்புள்கொடி உறவே, உன் துயரம் என் துயரம் போன்றது’ என்று தமிழ்நாட்டில் ஈரக்குரல் எழுப்பிய ஒரு காலம் இருந்தது. அது இப்போது ஓய்ந்து விட்டது. ஒருசிலர் அவர்களின் வயிற்றுப் பிழைப்புக்காக இன்னும் ‘நான் இருக்கிறேன்’ என்று பெருங்குரல் எழுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தக் குரலில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும். அவர்களாவது ஈழத்துப் படைப்பாளிகளுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருகிறார்களா? அதுவும் இல்லை.

திறமையான கலைஞர்களைக் கொண்டாடுவது அவசியமானதுதான். எல்லோருக்கும் சமவாய்ப்பு வழங்குங்கள் என்பதுதான் எனது கோரிக்கை. மற்றபடி இது யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக எழுதப்பட்டதல்ல, எனது நியாமான கோரிக்கையின் உண்மையை உணர்வீர்கள் என்று நம்புகிறேன்.









CHOLAN

சோழன் பொருட்களின்
விநியோகஸ்தகர்

DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழ வகைகள்
மற்றும் உணவுப்பொருட்களை
மொத்தமாக பெற்றுக் கொள்ள
நாடுங்கள்

StaR-Impex




**Lebensmittel Grosshandel e.K.**

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

சிறீ சிறீஸ்கந்தராசா, யாழ்ப்பாணம்.

# ஈழத்துப் பூதந்தேவனார்



ஈழத்து இலக்கிய வரலாறு சங்ககாலத்தில் இருந்து தொடங்குவது வழக்கம். ஈழத்துப் பூதந்தேவனாருடனேயே ஈழத்துத் தமிழிலக்கியப் பாரம்பரியம் தொடங்குகிறது எனக்கூறுவது இன்று மரபாகிவிட்டது. சங்கப் புலவர்களில் ஒருவரான ஈழத்துப் பூதந்தேவனார் என்பவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்பது பொதுவான கருத்து.

இதைத் தவிர யாழ்ப்பாண இராச்சியக் காலத்துக்கு முற்பட்ட இலங்கைத் தமிழரின் இலக்கியம் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைத்தில்லை. ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்தவராக ஏற்றுக்கொண்டால், சங்ககால நூல்களின் பின்னெல்லையான கி.பி. 3ம் நூற்றாண்டிற்கு முன்னர் எழுந்தனவாகவே இப்பாடல்கள் அமையும்.

அகநானூறு : 88, 231, 307,

குறுந்தொகை : 189, 343, 360,

நற்றிணை : 366

ஆகிய பாடல்கள் ஈழத்துப் பூதந்தேவனாருடையவை. ஈழத்துப் பூதந்தேவனார் என்பவர் சங்க இலக்கியங்களிலே நான்கு வகைப் பெயர்களில் அழைக்கப்படுகின்றார்.

**குறுந்தொகை 343, அகம் 88 - ஈழத்துப் பூதந்தேவன்**

**நற்றிணை 366 - ஈழத்துப் பூதந்தேவனார்**

**குறுந்தொகை 189, 360 - மதுரை ஈழத்துப் பூதந்தேவன்**

**அகம் 231, 307 - மதுரை ஈழத்துப் பூதந்தேவனார்**

இவ்வாறு குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை நானூறு ஆகிய நூல்களில் வரும் ஏழு செய்யுள்களில் இருந்து ஈழத்துப் பூதந்தேவனார் பற்றி அறியமுடிகின்ற போதிலும் இவர் ஈழத்தவர் என்பதற்கான எந்தவொரு ஆதாரமும் இந்நூல்களில் இடம்பெறவில்லை. 'ஈழத்து' என்ற அடைமொழியை மட்டும் வைத்துக்கொண்டு இவர் ஈழநாட்டினராக இருக்கலாம் எனக் கருதுவோரும் உள்ளனர். 'ஈழத்து' என்ற அடைமொழியுடன் இரண்டு இடங்களிலும், 'மதுரை ஈழத்து' என்ற அடைமொழியுடன் இரண்டு இடங்களிலுமாக அழைக்கப்பட்ட இவர் இலங்கையர்தானா என்பதற்கான ஆதாரங்களினைத் தேடப் பலர் முற்பட்டுள்ளனர்.

வேறுசிலர் 'ஈழம்' என்ற அடைமொழியின் அடிப்படையில் வரலாற்று ரீதியான ஆதாரங்களைத் தேட முற்பட்டு, இலங்கைக்கு வழங்கிவரும் பெயர்களில் இதுவும் ஒன்றாகையால் இவர் ஈழத்தவரே எனச் சுட்டிக் காட்டினர். இவர் ஈழத்தில் இருந்து மதுரையில் சென்று வசித்த காரணத்தினால் காலப்போக்கில் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்ற பெயரில் அழைக்கப் பட்டிருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு.

"இவர் ஈழ நாட்டில் நின்று மதுரையில் வந்து தங்கிய பூதன் மகன் தேவன் எனப்படுவார்" என்று நற்றிணை நானூறுக்கு தெளிவுரை எழுதிய அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் குறிப்பிடுகின்றார். மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்பவர் குறிஞ்சி, பாலைத் திணைகளுக்கான ஏழு அகப் பாடல்களைப் பாடியிருக்க, பூதந்தேவனார் என்ற புலவர் ஒருவர் மருதத் திணையைச் சிறப்பித்துப் பாடியிருப்பது நோக்கத்தக்கது.

குறுந்தொகை 285, நற்றிணை 80 ஆகிய இரு செய்யுள்களும் இவரால் பாடப்பட்டிருக்கின்றன. மருதத் திணையைச் சிறப்பித்துப்பாடி,

அகத்திணையிலே களவு நிகழ்ந்திருப்பதைக் கூறுவதாக இவருடைய பாடல்கள் காணப்பட, மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரோ,

**“வாடை வீசும் குளிர் காலத்திலே**
**தலைவியைப் பிரிந்து செல்வோன்**
**மடமையுடையவன்”**

என்ற பொருள் பட குறிஞ்சித் திணைப் பாடல்களைப் பாடியுள்ளார். எனவே பாடல்களைத் திணை அடிப்படையில் நோக்குகின்ற போது இருவரும் வெவ்வேறு புலவர்கள் எனக் கருத இடமுண்டாயினும், மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரும் ஈழத்துப் பூதந்தேவனாரும் ஒருவரே எனக் கொள்ளும் நாம் ‘ஈழத்து’ அல்லது ‘மதுரை ஈழத்து’ என்ற அடைமொழி இல்லாத காரணத்தினால் இவரை மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் அல்லர் என இலகுவாக ஒதுக்கிவிட முடியாது.

ஈழத்துப் பூதந்தேவனார் கடைச் சங்கப் புலவராக இருக்க வேண்டும் என்ற கருத்து வலுவுடையதாக உள்ளது. “பசும்பூட் பாண்டியனை” பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இவர் பாடிய (அகம் 231) பாடல் ஒன்றின் மூலம் இவருடைய காலம் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன.

பசும்பூட் பாண்டியனை பரணர், நக்கீரர், மதுரைக் கணக்காயர் முதலியோரும் பாடியிருக்கின்றனர். எனவே இவர்கள் எல்லோரும் சமகாலத்தினரா என்ற ஐயமும் எழுகின்றது. எனினும் பசும்பூட் பாண்டியனின் காலத்தை மட்டும் வைத்துக்கொண்டு ஈழத்துப் புதந்தேவனாரின் காலத்தை வரையறை செய்வதென்பதும் கடினமானதே!.

எது எப்படியாக இருப்பினும் இவர் பசும்பூட் பாண்டியனுக்குப் பிற்பட்டவர் அல்லது சம காலத்தவர் என்பது புலனாகின்றது. அதேபோல் ‘பரணர், நக்கீரர், மதுரைக் கணக்காயர், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் ஆகியோர் சமகாலத்தவர் என்று கூறுவதும் பொருத்தமானதல்ல’

ஈழ நாட்டைச் சேர்ந்த புலவரான ஈழத்துப் பூதந்தேவனார் கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் பல சான்றுகளை முன்வைத்து 1998 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நினைவுப் பேருரை ஒன்றை நிகழ்த்தியமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளையில் சங்கப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர் ஈழ நாட்டைச் சேர்ந்தவர் எனவும் மன்னாரில் முசலி (முரஞ்சி) என்ற கிராமத்தவர், எனவும் ‘ஈழ மண்டலப் புலவர் சரிதம்’ என்ற நூலில் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான வணிக நிலைத் தொடர்பினை நாம் பட்டினப்பாலையில் இருந்து அறிந்து




கொள்ளமுடிகின்றது. நீண்ட காலம் தொட்டு ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையில் இடையறாத் தொடர்பு இருந்து வருவதனை அவ்வப்போது வரலாற்று, புவியியல் ஆய்வுகள் நிறுவியுள்ளமையினையும் மறந்துவிடக் கூடாது.

எனவே நீண்ட காலமாக வணிக, பண்பாட்டு, மொழித் தொடர்புகளினால் பிணைக்கப்பட்ட தமிழகத்துக்கு இலங்கைத் தமிழ்ப் புலவர் ஒருவர் சென்று வாழ்வதென்பது இயலாத ஒன்றல்ல. அவ்வாறே ஈழத்துப் பூதந்தேவனாரும் மதுரையில் சென்று வசித்திருக்க முடியும். நிறுவன ரீதியாக (சங்கம்) புலவர்களை அனுசரித்துப் போற்றிய மதுரையில் இருந்து கொண்டு தனது இலக்கியப் பணியினை மேற்கொண்டிருக்கலாம். இவ்வகையில் ஈழத்து இலக்கிய வரலாற்றினை ஈழத்துப் பூதந்தேவனாருடன் தொடங்குவதே சிறப்பானதாக அமையும்.

ஈழத்துப் பூதந்தேவனார், ஈழத்துப் பூதன். சங்ககாலத்துப் புலவர். இவரது தந்தை ஈழத்துப் பூதன். ஈழநாட்டிலிருந்து பாண்டியநாடு சென்று மதுரைச் சங்கத்தில் புலவராய் திகழ்ந்தார். இவர் தனது தந்தையாகிய ஈழத்துப் பூதனோடு மதுரை சென்று, கற்றுப் புலவரானார் என்றும் கூறப்படுகின்றது.

ஈழத்து பூதந்தேவனார் என்னும் பெயர் நற்றிணையிலுங் குறுந்தொகையிலும் செய்யுள் முகப்பில் காணப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1998 இல் நிகழ்ந்த நினைவுப் பேருரை ஒன்றில் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள், ஈழநாட்டைச் சேர்ந்த புலவரான ஈழத்துப் பூதந்தேவனார் கி.பி. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று பல சான்றுகளை முன்வைத்து எடுத்துக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

அகநானூறு : 88, 231, 307,

குறுந்தொகை : 189, 343, 360,

நற்றிணை : 366,

அகநானூறு : 88 தரும் செய்தி இது குறிஞ்சித்திணைப் பாடல். காட்டு விலங்குகள் திரியும் வழியில் தலைவன் வந்திருக்கிறான். காவல் காக்கும் கானவன் கண்ணில் படாமல் வந்திருக்கிறான் இப்படி அரும்பாடு பட்டு வந்திருக்கிறான். நீ அவனிடம் செல் என்று தலைவியிடம் தோழி சொல்லும் பாடல் இது.

திணை:- குறிஞ்சி, துறை:- இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

“முடைச்சுவற் களித்த மூரிச் செந்தினை
ஒன்குவண்ர்ப் பெருங்குரல் உணீஇய, பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லி பாடுஓர்த்துக் குறுகும்
புருவைப்பன்றி வருதிறம் நோக்கி,
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி வந்து, நம்
நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோ தானே-- குன்றத்து
இரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுள்மலிபு இழிதரும் காமர் கடாஅம்
இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப, யாழ்செத்து,
இருங்கல் விடர் அலை அசுணம் ஓர்க்கும்
காம்புஅமல் இறும்பில் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிரல் உளியம் கெண்டும்
வடுஆழ் புற்றின வழக்குஅரு நெறியே?”

(அகநானூறு(களிற்றியானை நிரை (88)

## விலங்கினம்

***காட்டுப் பல்லி :*** தினையை மேயச் செல்லும் புருவைப் பன்றி காட்டுப் பல்லியின் ஒலியைக் கேட்டுக்கொண்டே செல்லுமாம்.

***அசுணம் :*** புலியைக் கொன்ற யானை தன் கடாம் என்னும் மதம் ஒழுகக் குரல் கொடுத்ததாம். அந்தக் குரல் ஒலியை யாழின் இசை என்று எண்ணி மலைப்பாறை வெடிப்புகளில் இருக்கும் அசுணம் என்னும் விலங்கு கேட்டு இன்புற்றதாம்.

***உளியம் :*** உளியம் என்பது கரடி. இது புற்றைக் கிண்டிக் கறையானை உண்ணும்.

புருவை : காட்டுப் பன்றியைப் புருவைப் பன்றி என்றனர். மலைநிலத்தில் விளைந்திருக்கும் தினையைப் புலுவைப் பன்றி மேய வரும். குறிஞ்சிநிலக் கானவன் பரண்மீது ஏறி இருந்துகொண்டு தன் கையிலிருக்கும் தீப்பந்தத்தைச் சுற்றி அதனை ஓட்டுவான்.

“ஈழத்துப் பூதந்தேவனார் ஈழநாட்டைச் சேர்ந்தவர் என, பேராசிரியர் வேலுப்பிள்ளை பல சான்றுகளைக் காட்டி விளக்கியுள்ளார். இவர் காட்டிய சான்றுகளைத் தகுந்த ஆதாரங்கள் காட்டி மறுக்கும் வரை ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழநாட்டவர் எனக் கூறத் தயங்க வேண்டியதில்லை” என பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தனது நூலில் குறிப்பிடுகின்றார்.




**FRANKFURT**
**TO**
**COLOMBO**
**QATAR AIRWAYS**

# AB749

**Coming September**

CENTURY
TRAVELS

**Rheinische Str.29-44137-Dortmund**

**0231 58 96 557 | 0231 55 74 319**

www.centurytravels.de
info@centurytravels.de

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

ENESAR N.S.R. என்எஸ்ஆர்

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




www.jaffnastores.com
info@jaffnastores.de
Tel. - 0521 174794
Mobile - 01732807906

Feilenstraße 8
33602 Bielefeld

